AHARAM
அகரம்

எண்: 11 எழுத்து: 05 மே - 2017 | ஷஃபான் 1438





# தேசம் கடந்து பயணிக்கும் சால்மன் மீன்கள்





மாதாந்த சிறுவர் சஞ்சிகை

50/-

www.aharam.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான்:
## ஈமானுடைய பருவகாலம்

ரமழான்; ஈமானுடைய பருவகாலம்
வந்து கொண்டிருக்கின்றது!
குர்ஆனிய மாதம் செங்கம்பளத்தின் மீது
வந்து கொண்டிருக்கின்றது


அன்பாளன் அல்லாஹ்வுடனான
தொடர்பை
இன்னும் நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டிய
தருணம் இது!
அதிகாலைகளையும் அந்திமாலைகளையும்
ஈமானிய நிறத்தினால்
அலங்கரிக்க வேண்டிய நொடிகள்
இவை!

"இல்லாமை இங்கு ஒழிய வேண்டும்"
என வறுமைக்கு எதிராக
போராடிய புனித மார்க்கம் இஸ்லாம்!
ஏழை எளியவர்
வீடு தேடிச் சென்று
விருப்புடன் உதவிடுவோம்!

நள்ளிரவு வரை விழித்திருந்து
நயமாய் ஏகனிடம்
தவ்பா வேண்டிடுவோம்
பாவங்கள் மன்னிக்கப்பட்ட
பச்சிளம் பாலர்களாய் பெருநாள்
கொண்டாடிடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



06

**எம்மால் கூட வேகமாகப் பாயும் அந்த ஆற்று நீரை எதிர்த்து நீந்துவது மிகவும் கடினம். அப்படியிருக்க, அளவில் சிறிய இந்த மீன்கள் அந்த நீரின் தீவிரத்தைக் கூட எதிர்த்து நீந்தி முன்னேறும் உடற் பலத்தைப் பெற்றிருக்கின்றன.**




22


PUBLIC LIBRARY
JAFFNA



24



32



38

AHARAM
அகரம்

எண்: 11 - மே : 2017 - எழுத்து: 05




## பாடத்திட்டம்



| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| வரலாறு | 20 |
| அரபு மொழி | 14 |






36

ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர் M.Ed

ஆலோசனைக் குழு

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

தொடர்புகளுக்கு:

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான்; வசந்தத்தின் வருகை

இன்னும் சில தினங்களில் நாம் ரமழான் எனும் வசந்த காலத்திற்குள் நுழைய இருக்கிறோம். அவை மனித உள்ளங்களுக்கு நன்மைகளைப் பொழியும் அழகிய நாட்கள். தூக்கமும் இபாதத் என்ற தரத்தில் நோக்கப்படும் செழுமை மிக்க காலம். ஒவ்வொரு நற்கருமத்துக்கும் இரட்டிப்பான நன்மைகளை பெற்றுத் தரும் பருவம். பாவங்களை அழிக்கக் கூடிய, எங்கள் தக்வாக்களை (இறை அச்சத்தை) அதிகரிக்கக் கூடிய, நன்மையின் பால் எம்மை இட்டுச் செல்லக் கூடிய தருணங்கள் அவை. வரலாற்றில் பல வெற்றிகளையும் மாற்றங்களையும் ஏற்படுத்திய அருள் மாதமே ரமழான்.

எம்மை நோக்கி வரவிருக்கும் இந்த ரமழான் மாதத்தின் ஒவ்வொரு நிமிடத்தையும் வினாடியையும் அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித் தந்த துய்மையான வணக்கங்களில் எமது உள்ளங்களை ஒருநிலைப்படுத்தி, ரமழானின் ஆரம்பம் முதல் இறுதி வரைக்கும் கடைப்பிடித்து, சுவர்க்கத்தை எமது வாழ்வின் இலக்காக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டியது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும். இம்மாதத்தை பொறுமைக்குரிய மாதம், தவ்பாவுக்குரிய மாதம், பாவங்களை அழிக்கும் மாதம் என இஸ்லாம் பல பெயர்களில் அழைக்கின்றது. நோன்பாளிகளின் சிறப்புக்கள் தொடர்பாக பின்வரும் ஹதீஸ்கள் எமக்கு படிப்பினையாக அமைகின்றன.

''நோன்பாளிகள் நோன்பு திறக்கும் வரைக்கும் மலக்குமார்கள் அவர்களுக்காக (நோன்பாளிகளுக்காக) பாவமன்னிப்பு வேண்டுகிறார்கள்.'' (அஹமத்)

''நாளை மறுமைநாளில் நோன்பாளிகளுக்காக நோன்பு ஷபாஅத் செய்யும்.'' (அஹமத், ஹாக்கிம்)

''நிச்சயமாக சுவர்க்கத்திற்கு றையான் எனும் வாயில் உண்டு. அதில் மறுமைநாளில் நோன்பாளிகள் நுழைவார்கள்; அவர்களைத் தவிர வேறு யாரும் நுழைய மாட்டார்கள். அவர்கள் நுழைந்து விட்டால் அது மூடப்படும். மேலும் அதில் வேறு யாரும் நுழைய மாட்டார்கள்.'' (புஹாரி, முஸ்லிம்)

நாம் ரமழான் மாதம் அல்லாத மாதங்களில் சில பாவங்களை சிந்திக்காமல் செய்திருப்போம். ஆனால், இந்த ரமழான் மாதத்தின் ஒவ்வொரு வினாடியையும் சிந்தித்து நல்ல காரியங்களில் செயல்படுத்த ஆசை வைப்போமாக! ரமழான் மாதம் குர்ஆன் இறங்கிய மாதமாக இருப்பதால் அதிகமதிகம் குர்ஆனை ஓதி அதன் கருத்தை விளங்க முயற்சிக்க வேண்டும். அத்தோடு, எமது உள்ளங்களில் படிந்திருக்கும் பாவக்கறைகளை நீக்குவதற்கு அதிகமதிகமாக அல்லாஹ்விடம் இறைஞ்சுதல், இரவு வணக்கங்களில் ஈடுபடல், ஐங்காலத் தொழுகைகளை கூட்டாக நிறைவேற்றல், உள்ளத்துக்கு ஒத்தடமாய் அமையும் திக்ருகளைச் செய்தல், முடிந்தவரை தர்மங்களில் ஈடுபடல், பெற்றோருக்கு உதவுதல், நோன்பு திறக்கும் ஏற்பாடுகளைச் செய்தல், பயன் தரும் நூல்களை வாசித்தல், ஆகுமான விளையாட்டுக்களில் ஈடுபடல் என எமது நோன்பை ஆரோக்கியப்படுத்தும் விடயங்களில் நாம் ஈடுபட முயற்சிக்க வேண்டும். அதற்கான அழகிய திட்டத்தினை நாம் இப்போதே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தோடு, நோன்பின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் அனைத்து வித காரியங்களை விட்டும் எமது உடலையும் உள்ளத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியதும் எமது கடமையாகும்.

எனவே, எம்மை நோக்கி வரவிருக்கும வசந்த காலத்தை அழகாக வரவேற்று, எமது நோன்புகளை உயிரோட்டமுள்ள நோன்புகளாகவும் நாளை மறுமையில் எமக்கு ஷபாஅத் செய்யத் தகுதியுள்ள தூய்மையான நோன்புகளாகவும் மாற்றிக் கொள்ள முயற்சிப்போம், இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபுஹுறைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''உங்களில் ஒருவர் நோன்பு வைத்தால், அவர் தீய பேச்சுக்களைப் பேச வேண்டாம், கூச்சலிட வேண்டாம் யாராவது ஒருவர் அவரைத் திட்டினால் அல்லது அவரிடம் சண்டை போட்டால் 'நான் நோன்பாளி' என கூறி விடட்டும்.'' (புஹாரி, முஸ்லிம்)

மனிதனை பண்பாட்டு ரீதியாக பக்குவப்படுத்தி அவனை அல்லாஹ்விடம் சிறந்த அடியானாகக் கொண்டு சேர்க்கின்ற அடிப்படை அம்சங்களாகவே இஸ்லாம் அறிமுகப்படுத்தியுள்ள இபாதத்கள் அனைத்தும் காணப்படுகின்றன.

தொழுகை மானக்கேடானவற்றிலிருந்து மனிதனைக் காக்கின்றது. ஸகாத் குறுகிய மனப்பாங்கிலிருந்து மனிதனின் உள்ளத்தை பரிசுத்தப்படுத்துகின்றது. அதேபோன்று, ஹஜ் கடமையும் துர்நடத்தை, பாவமான செயற்பாடுகள் மற்றும் தர்க்கம் புரிதல் போன்றவற்றிலிருந்து மனிதனை தூரமாக்குகின்றது.

இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுள் ஒன்றான நோன்பு மனிதனை உயர் பண்பாடுகளின் சிகரமாக மாற்றக் கூடியதாக இருப்பதை, நபியவர்களின் மேற்படி ஹதீஸைப் படிக்கும்போது நாம் புரிகின்றோம். அதாவது, நோன்பு மனிதனிடம் சில மாற்றங்களை எதிர்பார்க்கின்றது. அவைதான் தக்வா, பண்பாடு, தன்னடக்கம் போன்றவையாகும்.

இம்மாற்றங்கள் ஒரு நோன்பாளியில் ஏற்படும் போதே அவனது நோன்பு பூரணமாகி அவன் மறுமையில் 'றய்யான்' என்ற வாயிலின் ஊடாக சுவனத்தை அடைய முடியும். வெறுமனே தாகித்திருப்பதனாலோ, பசித்திருப்பதனாலோ ஒருவன் சுவனத்தை அடைய முடியாதென்பதை பின்வரும் நபிமொழியும் உறுதிப்படுத்துகின்றது.

''பொய் பேசுவதையும் பொய்யைக் கொண்டு செயல்படுவதையும் விடாதவர் தன் உணவையோ, பானத்தையோ விட்டு விடுவதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை.'' (புகாரி, முஸ்லிம்)

பொய், புறம், கோள் போன்ற தீய பேச்சுக்கள் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவை. இறையச்சமுடைய எந்த மனிதனது வாயிலிருந்தும் இத்தகைய மோசமான வார்த்தைகள் வெளிவர முடியாது. அவன் எப்போதும் தனது வார்த்தைகளை இறைதிருப்தியை இலக்காகக் கொண்டே வெளியிடுவான்.

நோன்பு நோற்கின்ற ஒருவர் உள்ளத்தால் மாத்திரம் நோன்பிருக்காது உறுப்புக்களாலும் நோன்பிருக்க வேண்டும் என்பதை நபியவர்கள் சுருக்கமாக இங்கு குறிப்பிட்டுள்ளார்கள். பிறர் சண்டைக்கு வரும்போது கூட தான் நோன்பாளி எனக் கூறி பொறுமையாக இருப்பது முன்மாதிரி மிக்க இறை விசுவாசியினாலேயே முடியும்.

ஒரு மனிதன் நல்ல நடத்தையின் மூலம், தொடர்ந்து நோன்பு நோற்கின்ற, நின்று வணங்குகின்ற மனிதர்களின் அந்தஸ்தை அடைகின்றான். நன்னடத்தையின் உயர்ந்த நிலையே பிறர் தன்னுடன் சண்டையிட வரும்போது ஒதுங்கிக் கொள்வது. இம்மனோநிலையை மனித உள்ளத்தில் பாய்ச்சுகின்ற ஒன்றாக நோன்பு காணப்படுகின்றது.

அதேபோன்று, நற்குணம் மறுமையில் நன்மைத் தராசை கனக்கச் செய்யக் கூடியதாகவும் உள்ளது. பண்பற்ற வார்த்தைகளைப் பிரயோகிப்பவனை அல்லாஹ் வெறுக்கின்றான் எனவும் நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும், அல்லாஹ் நோன்பின் நோக்கம் பற்றி கூறும்போது:

''ஈமான் கொண்டோரே! உங்களுக்கு முன்பிருந்தோர் மீது கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டது. இதன் மூலம் நீங்கள் இறையச்சம் உடையோர் ஆகலாம்.'' (02: 182)

இங்கு நோன்பின் பிரதான நோக்கமாக கருதப்பட்டிருப்பது மனிதனை இறையச்சமுள்ளவனாக மாற்றுவதே. இறையச்சம் உள்ளத்திலிருந்து எடுபடுவதே அனைத்துப் பாவங்களுக்குமான ஆணிவேராகும்.

உள்ளங்கள் எப்போதும் இறை சிந்தனையுடனும் இறையச்சத்துடனும் இருப்பதற்கான ஏற்பாடுகளாக இரவுத் தொழுகை, அல்குர்ஆன் பாராயணம், திக்ர் போன்றவை காணப்படுகின்றன.

எம்மை வந்தடைந்துள்ள புனிதமிகு ரமழானில் இந்நல்லமல்கள் மூலம் இறையச்சத்தையும் நற்பண்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டு மறுமையில் நோன்பாளிகளுக்கென்றே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'றய்யான்' என்ற வாயிலினூடாக சுவனம் நுழைய செயற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

தொடர் 03

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | மலையாளத்திலிருந்து தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

# காபிலின் காகம்

''இது என்னுடைய குடிசையாகும்'' ஆவேஷக் குரலில் காபில் கத்தினான். கையை ஓங்கி ஆபிலின் கன்னத்தில் அறைந்தான். பயங்கரமான தாக்குதல்!

விரல்கள் பதிந்து சிவந்த கன்னத்தைத் தடவிக் கொண்டு ஆபில் தான் அவமானப்பட்டதாக உணர்ந்தான். அவன் துக்கமடைந்தான். உள்ளே ஆத்திரம் பொங்கியது. கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென வழிந்தோடியது. களங்கமில்லாத கண்ணீர்!

''சகோதரா... என்னுடைய கைகளைப் பார்! இக்குடிசையை நிர்மாணிப்பதில் நாளாந்தம் உழைத்து கரடு தட்டிப்போன உள்ளங்கைகள்'' ஆபில் தனது பக்க நியாயத்தைப் பக்குவமாக எடுத்துச் சொல்கிறான்.

''இன்று பொழுது சாய்ந்தது முதல் நீ இந்தக் குடிசையில் இருக்கக் கூடாது'' காபில் உயர்ந்த குரலில் அதட்டினான்.

ஆபில் அமைதியாக மறுமொழி பகர எத்தனித்தான்.

''காபில் உன்னுடன் எனக்கு பாசம் மட்டுமே உண்டு. ஆயினும்...'' ஆபிலின் மறு மொழியைக் காதில் வாங்காமலே காபில் தொலைவுக்குச் சென்று விட்டான்.

இந்த சம்பவத்தைக் குறித்து ஆதமிடம் ஆபில் எதுவும் சொல்வதை நான் காணவில்லை. காபிலின் நடவடிக்கைகள் ஆதமின் உள்ளத்தை அதிகமாகப் புண்படுத்தியிருந்ததை ஆபில் அறிந்திருந்தான். தந்தையின் துக்கத்தை அதிகப்படுத்த அவன் விரும்பவில்லை போலும். காபிலை தந்தையிடம் சொல்லி பயம் காட்டுவதில் எந்தப் பலனும் இல்லை என்று அவன் கருதியிருப்பான்.

சூரியன் அஸ்தமித்தபோது காபில் தனது குடிசையை நோக்கி வருவதை ஆபில் கண்டான். அவனது கையில் ஒரு கூரான கல்லை வைத்திருந்தான். ஆபில் எதுவும் பேசுவதற்கு முன்பே அவனது நெற்றியில் அந்த கல்லால் ஒரு குத்து! குப்பென்று பொங்கியது இரத்தம்! காபில் ஆபிலை தூக்கி குடிசைக்கு வெளியே வீசினான். ஆபில் சில பச்சை இலைகளை எடுத்துக் கசக்கி தனது நெற்றிக் காயத்தில் வைத்து அழுத்தினான். குடிசைக்கு வெளியே படுத்து உறங்க ஆரம்பித்தான்.

குடிசைக்கு வெளியே படுத்து உறங்கும் தனது அன்பு மகன் ஆபிலை ஆதம் கண்டார். நெற்றியிலிருந்து வழிந்து காய்ந்திருந்த இரத்தத்தைக் கண்ட ஆதம் திடுக்கிட்டார்.

''காபில் நீ உன்னுடைய சகோதரனை என்ன செய்தாய்?'' ஆதம் உரத்த குரலில் வினவினார். அதில் அளப்பரிய துக்கமும் கலந்திருந்தது.

காபிலைப்போல இருக்கவில்லை ஆபில். காபிலுடன்உடன் பிறந்த சகோதரி இக்லிமாவும் ஆபிலுடன் பிறந்த லூமாவும் இவ்வாறுதான். காபிலுக்கு நல்ல பருத்த சரீரம். லூமாவாகட்டும் இக்லிமாவைப் போல அழகாக இருக்கவில்லை. ஆதமுக்கு வழங்கப்பட்ட ஷரீஅத் சட்டத்தின்படி இக்லிமாவை ஆபிலும் லூமாவை காபிலும் மணம் செய்ய வேண்டி இருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனக்கு ஆபிலையே மிகவும் பிடித்திருந்தது. ஆபிலுக்கு அழகியாகிய இக்லிமா நிச்சயிக்கப்பட்டது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆபில் எவ்வளவு நல்லவன்! அவனது உணவை நாங்கள் உண்ணுவதைக் கண்டால் ஒருபோதும் அவன் எங்களுடன் கோபித்துக் கொள்ள மாட்டான். ஒரு நாள் அவனது கோழிகள் இட்ட முட்டைகளின் அருகில் நான் நின்று கொண்டிருந்தேன். என்ன ஆச்சரியம்! அவன் எனக்கு ஒரு முட்டையை நீட்டித் தந்தான். எங்களைப் போல உள்ள உயிரினங்களிடம் அவன் காட்டிய வாஞ்சை என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. தனது சூழலில் உள்ள ஜீவராசிகளுடன் பரஸ்பரம் ஒத்திசைவான வாழ்க்கை என்ற தத்துவத்தைப் புரிந்து கொண்ட மானிடன். காருண்யம் என்பதன் அர்த்தத்தை அவன் விளங்கியிருந்தான்.

அல்லாஹ்வை அறிந்து கொண்ட மனிதன் அவன். அல்லாஹ்வை நேசிக்கவும் அவனை அஞ்சிக் கொள்ளவும் செய்யும் மனிதன்!

ஆபில் இக்லிமாவைத் திருமணம் முடிப்பதை காபில் விரும்பவில்லை. அவன் தானே இக்லிமாவைத் திருமணம் செய்ய விரும்பினான்.

''இல்லை... நான் இதற்கு சம்மதிக்கப் போவதில்லை. நான்தான் ஆபிலை விட சிறந்தவன்'' காபில் கத்தினான்.

காபிலின் இந்த வார்த்தைகளுக்குப் பின்னால் ஷைத்தான் இருந்தான். அவன் ஆதமுடைய விஷயத்தில் இதே வார்த்தைகளைத்தானே பிரயோகித்தான். தனது சகோதரனை பழிக்கவும் இதே வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்தான்.

''லூமாவை நான் திருமணம் முடிக்க மாட்டேன்'' ஆதமுக்கு முன் சப்தமிட்டு கத்தினான் காபில். ''எனக்கு இக்லிமாவே வேண்டும். நாங்கள் இருவரும் ஒரே சூலில் வளர்ந்தவர்கள். எனவே, ஆபிலை விட நானே அவளை மணப்பதற்கு அருகதையுடையவன்.''

ஒரே சூலில் பிறந்த சகோதரியை மணக்க மார்க்கம் அனுமதிக்கவில்லை என்பதை ஆதம் காபிலுக்குப் புரிய வைக்க முயற்சித்தார். ஆயினும், காபில் தனது கருத்திலேயே பிடிவாதமாக இருந்தான். அவனது வரம்பு மீறல் என்னை திகைக்க வைத்தது. ஆதம் இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்த்து வைக்கப் போகின்றார் என்று எண்ணி நான் மலைத்தேன்.

முடிவில் ஆதம் சொன்னார்: ''நீங்கள் இருவரும் அல்லாஹ்வுக்கு வழிபாடு நடத்தி குர்பான் கொடுங்கள். யாருடைய குர்பானியை அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றானோ அவருக்கு இக்லிமாவைத் திருமணம் முடித்து வைப்போம்.''

இவர்களிடையே தீர்ப்பளிப்பதை ஆதம் தவிர்ந்து கொண்டு அதனை அல்லாஹ்வின் மீது பாரம் சாட்டி விட்டார்.

அல்லாஹ் எப்படி குர்பானியை ஏற்றுக் கொள்வான்? அதைக் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. இந்த குர்பானியைப் பற்றியும் எனக்கு எந்த அறிவுமில்லை.

பல நாட்கள் நான் காத்துக் கிடந்தேன். இந்த நாட்களில் காகங்களான எங்களது உலக பிரச்சினைகளில் நான் ஈடுபட்டிருந்தேன். குற்றம் புரிந்து விட்டுத் தப்பித்து ஓடி ஒளித்துக் கொண்டிருந்த ஒரு காகத்தைக் கண்டுபிடிப்பதில் நாங்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தோம்.

❖ ❖ ❖ ❖

ஆபிலினதும் காபிலினதும் குர்பானி (அல்லாஹ்வுக்கான அர்ப்பணம்) வழிபாடு காணுவதற்காக நான் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தேன்.


இவ்வாறு இருக்கும்போது குர்பானி கொடுக்க வேண்டிய நாளும் வந்தது. ஆபில் தனது ஆட்டு மந்தையிலிருந்து நன்கு கொழுத்த அழகிய ஓர் ஆட்டை ஓட்டி வந்தான். அதனை மலை உச்சியில் வைத்து தனது குர்பானியை ஏற்று அங்கீகரிக்குமாறு அல்லாஹ்விடம் இரு கையேந்தி பிரார்த்தனை புரிந்தான்.

ஒரு பிடி பச்சை கோதுமைக் கதிர்களை கையில் வைத்திருந்தான் காபில். சரியாக முற்றியிருக்காத கோதுமை. பேராசை பிடித்தவனாகவும் உலோபியாகவும் காபில் இருந்தான். எங்கள் கூட்டத்தில் எவருக்கும் அவனது உணவில் இருந்து எதுவும் கிடைப்பதே இல்லை. காபில் தனது குர்பானியைத் தரையில் வைத்து விட்டு தூர விலகிச் சென்றான். இரு சகோதரர்களும் இப்போது தூரத்தில் நின்று தமது குர்பானிக்கு என்ன நடக்கப் போகின்றது என்பதை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com

# தேசம் கடந்து பயணிக்கும் சால்மன் மீன்கள்

சாலமன், சால்மன் அல்லது செமன் **(Salmon)** என்றதும் நாம் உணவுக்காக எடுத்துக் கொள்ளும் செமன் டின் மீன் ஞாபகத்திற்கு வருகின்றதா? ஆம்! அதுவேதான். பதனிடப் பட்டு, அடைக்கப்பட்டு கடைகளில் விற்ப னைக்கு வரும் அந்த மீனினத்தைப் பற்றித் தான் நாம் இத்தொடரில் பார்க்க இருக்கின் றோம். இவற்றின் விசித்திரமான வாழ்க்கை வட்டத்தைப் படித்துப் பார்த்தால் ஆச்சரியப் படுவீர்கள். அற்புதமான, நம்ப முடியாத பல இயல்புகளைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் இம்மீன்கள், வல்ல அல்லாஹ்வின் படைப்பாற்றலை ஒரு முறை மீட்டிப் பார்க்க வைக்கின்றன.

**வாழும் பிரதேசங்கள்**

எல்லா இடங்களிலும் இந்த வகை மீன்கள் இருப்பதில்லை. அத்திலாந்திக் மற்றும் பசுபிக் சமுத்திரங்களிலும் அமெரிக்காவின் அலாஸ்கா கடல் பகுதிகளிலும் இவை கணிசமாக வாழ் கின்றன. அமேசன் காடுகளிலும் அவுஸ்தி ரேலியா, நியூஸிலாந்துக் காடுகளிலும் ஆசியக் கண்டத்தின் இந்தியா, சீனா, இந்தோனேஷியா காடுகளிலும் உள்ள நன்னீர் ஆறுகளிலும் இவை உயிர் வாழ்கின்றன. கடல் நீரில் வாழும் மீனினங்களால் நன்னீரில் வாழ முடியாது. அதேபோன்று, நன்னீரில் வாழும் உயிரினங்களால் கடல் உப்பு நீரில் வாழவும் முடியாது. ஆனால், அல்லாஹ்வின் இந்த அற்புதப் படைப்பான சால்மன் மீன்களால் கடல் நீரான உப்பு நீரிலும் வாழ முடியும் கரை நீரான நன்னீரிலும் வாழ முடியும்.

**உடலமைப்பு**

பொதுவாக, எல்லா மீனினங்களையும் போன்ற உட லமைப்பைத்தான் இவையும் கொண்டுள்ளன. நன்கு வளர்ந்த ஒரு சால்மன் மீனின் நீளம் ஒன்றரை அடி வரை இருக்கும். நான்கு முதல் ஐந்து வருடங்கள் வரை இவை உயிர் வாழும். அவற்றின் உடல் சிவப்பு நிறத்திலும் தலையும் வாலும் பச்சை நிறங்களிலும் இருக்கும். ஆண் மீனின் முகம் நீண்டும் அவற்றின் வாய்கள் முன்னோக்கி நீண்டு வளைந்தும் வாயில் கூரிய பற்களும் இருக்கும். நன்னீரிலும் உப்பு நீரிலும் வாழத்தக்க அமைப்பில் அவற்றின் உடல் உட்பாகங்கள் வடிவமைக்கப்பட்டும் இருக்கும்.

**தேசாந்திரப் பயணம்**

சால்மன் மீன்களின் விசேட அம்சமே இதுதான். மூன்று வருடங்கள் கடலிலே உயிர் வாழ்ந்து, நன்றாக வளர்ந்து இனப்பெருக்கப் பருவத்தை அடையும் சால்மன் மீன்கள் அடுத்து இன்னும் ஒரு வருடத்திற்குள் தமது வாழ்க்கை முடிவுறப் போகிறது என்பதை அறிந்து கொள்ளும். எனவே, தாம் இறந்து விட முன்பு அடுத்த சந்ததிகளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உருவாக்கி விட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காக அற்புதமானதொரு பணியை இவை செய்கின்றன. அது தான் அவை பயணிக்கும் தேசாந்திரப் பயணம்.

இனப்பெருக்க காலம் வந்ததும் பல ஆயிரக்கணக்கான சால்மன் மீன்கள் அவை பிறந்த இடத்தை நோக்கிப் பயணிக்க ஆரம்பிக்கின்றன. எனவே, அவை ஆறும் கடலும் ஒன்றுசேரும் முகத்துவாரங்களை நோக்கிப் படையெடுக்கின்றன. உப்பு நீரில் வாழ்ந்து பழகிய இவற்றால் உடனடியாக நன்னீரில் வாழ முடியாது, அவை இறந்து விடும். எனவே, உப்பு நீரும் நன்னீரும் சங்கமமாகும் முகத்துவாரத்தில் இருந்து கொண்டு நன்னீர் வாழ்க்கைக்காகத் தமது உடலைத் தயார்படுத்திக் கொள்கின்றன. அப்படி சில வாரங்கள் இந்தப் பயிற்சி தொடரும். அதன் பின்பு ஒவ்வொரு மீனாக நீரின் திசைக்கு எதிர்த்திசையில் நீந்தி கடலிலிருந்து ஆற்றை நோக்கிப் படையெடுத்துப் பயணிக்கும்.

ஏன் இவை அடுத்த சந்ததியைப் பெருக்குவதற்காக கடலைத் தெரிவு செய்யாமல் நன்னீர் ஆறுகளைத் தெரிவு செய்கின்றன என்றால், கடலின் உப்புச் செறிவு மிக்க நீரில் முட்டைகளை இட்டால் அவை அழிந்து விடுவதாலும் பிறக்கும் சிறிய குஞ்சுகளால் செறிவு மிக்க கடல் நீரில் வாழ முடியாது என்பதாலும்தான். எனவே, அவை நன்னீரை நோக்கிப் பயணிக்கின்றன. இன்னும் பல ஆயிரம் உயிரினங்களுக்கு உணவாகும் விதத்திலும் அல்லாஹ் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்க வேண்டும்.

**பயணத்தில் எதிர்கொள்ளும் சவால்கள்**

அவற்றின் முதல் சவால் ஆறுகளிலிருந்து கடலை நோக்கித் தீவிரமாகப் பாய்ந்து வரும் நீர்தான். எம்மால் கூட வேகமாகப் பாயும் அந்த ஆற்று நீரை எதிர்த்து நீந்துவது மிகவும் கடினம். அப்படியிருக்க, அளவில் சிறிய இந்த மீன்கள் அந்த நீரின் தீவிரத்தைக் கூட எதிர்த்து நீந்தி முன்னேறும் உடற் பலத்தைப் பெற்றிருக்கின்றன.



இவற்றின் இரண்டாவது எதிரி செல்லும் பாதையில் குறுக்கிடும் நீர்வீழ்ச்சிகள். எதிர்த்திசையில் பீய்ச்சி அடிக்கும் நீரையும் எதிர்த்து சுமார் 20, 30 அடிகள் உயரமான நீர்வீழ்ச்சிகளையும் தாவிக் குதித்து நீந்தி மேலே ஏறி விடுகின்றன.

சால்மன் மீன்களின் மூன்றாவது மிகப் பெரும் எதிரி மனிதன்தான். ஒவ்வொரு வருடமும் நடக்கும் இடப்பெயர்வின் பருவ காலத்தை அறிந்து வைத்திருக்கும் மீனவர்கள் இலட்சக்கணக்கில் படையெடுக்கும் இம் மீன்களை சமுத்திரத்தில் வைத்தும் முகத்து வாரங்களில் வைத்தும் வலை விரித்தும் பாரிய மீன்பிடி இயந்திரங்களைப் பயன் படுத்தியும் பிடித்து விடுகின்றனர். அவ்வாறு பிடிக்கப்பட்ட மீன்கள்தான் டின்களில் அடைக்கப்பட்டு எமக்கு உணவுக்காகவும் வருகின்றன.

இவற்றின் நான்காவது எதிரி கரடிகள். பனிக் காலம் முடிந்து ஆறு மாதங்களாக குகைக்குள் அடைந்து உறங்கிக் கிடந்த கரடிகள் பசியெடுத்து சால்மன் மீன்களின் இடப்பெயர்ச்சிக் காலத்தில்தான் வெளியேற ஆரம்பிக்கின்றன. ஆறு மாத காலம் பசியுடன் இருந்து விட்டு தீர்ந்து போன கொழுப்புச் சத்தைச் சேகரிக்க நீர்வீழ்ச்சிகளில் சாலமன் மீன்களின் வருகையை எதிர்பார்த்து கூட்டமாக காத்திருக்கும் கரடிகள். நீர்வீழ்ச்சிக்கு எதிரே தாவித் தாவி இம்மீன்கள் மேலே ஏறும்போது கரடிகள் லபக் லபக் என அவற்றைப் பிடித்து உண்டு ஏப்பம் விடும்.

இவை மட்டுமன்றி, ஆங்காங்கே நரிகளும் ஓநாய்களும் கூட்டமாக வேட்டைக்குத் தயாராயிருக்கும். நன்னீர் ஏரிகளில் வாழும் அனகொண்டா வகை மலைப் பாம்புகளிட மிருந்தும் முதலைகளிடமிருந்தும் அவை தப்பிக்க வேண்டும். மேலும் பருந்து, கழுகு போன்ற இதர பறவைகளிடமிருந்தும் இவை தப்ப வேண்டும். இவ்வாறு பல்வேறு சவால் களையும் தாண்டித்தான் இந்த சால்மன் மீன்கள் தமது தேசாந்திரப் பயணத்தை வெற்றிகரமாக சென்று முடிக்கின்றன. இந் தக் கடினமான பயணத்தில் பல ஆயிரம் மீன்கள் இறந்து போயிருக்கும். இந்தச் சவால் களையெல்லாம் கண்டு அவை தயங்குவ தில்லை. வாழ்வு அல்லது சாவு என்ற திட மான நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வது எமது வாழ்க்கைக்கும் மிகப் பெரும் பாட மாகும். இவ்வாறு சுமார் 7000 கி.மீ.களைக் கடந்து இவை பயணிக்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்காப்புத் திட்டங்கள்**

இத்தகைய ஆபத்துக்களிலிருந்து தப்பிச் செல்வதற்கான யுக்திகளையும் அல்லாஹ் அவற்றுக்கு வழங்கியுள்ளான். ஒன்று சால்மன் மீன்களால் துரு துருவென அதிவேகமாக நீந்திச் செல்ல முடியும். மற்றையது, அவை பயணிக்கும் நன்னீர் பாதையில் முளைத்திருக்கும் சிவப்பு, பச்சைப் பாசிகளின் நிறத்தில் சால்மன் மீன்களின் உடல் நிறமும் இருப்பதால் பறவைகளால் இவற்றைக் கண்டுபிடித்து வேட்டையாடுவது சிரமமாக இருக்கும்.


சால்மன் மீன்கள் புத்திக்கூர்மை மிக்கவை என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவை தமது புத்திக்கூர்மையைப் பயன்படுத்தி தப்பிக்கவும் முயல்கின்றன. நீந்திச் செல்லும்போது நீரில் ஏற்படும் அழுத்த மாற்றங்களைக் கணித்து திசையை மாற்றிக் கொள்கின்றன. கடலில் மீன் வலைத் தடுப்பு இருப்பதை உணர்ந்து கொண்டால் அவை ஒட்டுமொத்தமாக தகவல்களைப் பரிமாறிக் கொண்டு கடலுக்குள் பின்வாங்கி விடுகின்றன. அவை இல்லாத பகுதிகளைப் பார்த்து தப்பித்து முன்னேறி விடுகின்றன.

அதேபோன்று, நீர் அருவிகளைக் கடந்து செல்லும்போது அங்கே வேட்டைக்குக் காத்திருக்கும் கரடிகள், நரிகள், ஓநாய்கள் என்பவற்றின் பிடியிலிருந்தும் மறைந்து தப்பித்துச் செல்லும் தொடர்பாடல் வழிமுறைகள் அவற்றிடம் உண்டு. நீரின் மேல் விழும் நிழல்கள் குறித்தும் அவை மிகக் கவனமாக இருக்கின்றன. இராஜாலிப் பருந்துகள் பறந்து வந்து மீன்களைத் தாக்குவதை இவை அவற்றின் நிழல்களை வைத்தே ஊகித்து திசையை மாற்றி மறைந்து விடுகின்றன. தமது சிரம சாத்தியமான பயணத்தைத் தொடரும்போது ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து தப்பித்துக் கொள்ள இவ்வாறான பல்வேறு தற்காப்புத் திட்டங்களை அவை கொண்டுள்ளன.

**தாய் மண்ணை வந்தடைதல்**

இவ்வாறு பல தடைகளையும் தாண்டி இறுதியாக தாம் பிறந்த தாய் மண்ணை மீண்டும் இவை வந்தடைகின்றன. சமுத்திரத்தில் இருந்து இவ்வளவு தூரம் அவை பயணித்தது தாம் பிறந்த தமது பெற்றோர் தம்மை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்து விட்டு இறந்த அந்த இடத்தை நோக்கித் தான். தாம் பிறந்த இடம் இதுதான் என்பதை சுமார் நான்கு ஆண்டுகள் கடந்த பின்னரும் அவை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு மீண்டும் அதே இடத்தை வந்தடைவது ஆராய்ச்சியாளர்களையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

**இனப்பெருக்கம்**



குறித்த இடத்தை வந்தடைந்த பின்னர்தான் ஆண், பெண் சால்மன் மீன்கள் இனப்பெருக்கத்தில் இணைகின்றன. வாழ்நாளில் ஒரு முறைதான் இவை இனப்பெருக்கம் செய்கின்றன. இணைந்த சில நாட்களில் பெண் சால்மன் மீன் ஆற்றில் நீரோட்ட வேகம் குறைவான பாதுகாப்பான இடங்களில் தனது வாலினால் பள்ளங்களைத் தோண்டும். தோண்டி அங்கே முட்டைகளை இடும். ஒரு தடவையில் ஒரு பெண் மீன் 3000 முதல் 4000 வரையில் முட்டைகளை இடும். ஒரு சால்மன் மீன் இவ்வளவு தொகையான முட்டைகளை இடும் என்றால் அங்கே குழுமியிருக்கும் ஆயிரக்கணக்கான மீன்களும் எத்தனை முட்டைகளை இடும் என்று எண்ணிப் பாருங்கள், சுப்ஹானல்லாஹ்.

முட்டைகளை இட்டு ஓரிரு மாதங்களில் பெண் மீன்கள் எல்லாம் இறந்து போகும். அம்முட்டைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆண் மீன்களைச் சாரும். அடுத்த இரண்டு மாதங்களில் ஆண் மீன்களும் கொத்துக் கொத்தாக இறந்து விடும். கடல் போன்று சரியான உணவு கிடைக்காததும் நீரில் உள்ள குறைபாடுகளும் பல மைல்கள் தொடர்ந்து பயணித்து வந்த களைப்பு அனைத்தும் சேர்ந்து இவற்றை ஆட்கொள்ள இவை பலவீனப்பட்டு ஆற்று ஓரங்களில் உள்ள மரவேர்களுக்குள் தஞ்சம் புகும். இறுதியில் பிறந்த மண்ணிலேயே அவை இறந்து விடுகின்றன.

முட்டையிட்டு சரியாக நான்கு மாதங்களில் குஞ்சு சால்மன் மீன்கள் முட்டைகளை விட்டு வெளியே கிளம்பும். இலட்சக்கணக்கில் வெளிக் கிளம்பும். இக்குட்டி மீன்களுக்கு சுமோல்ட் என்று பெயர்.

**25 ஆம் பக்கம் பார்க்க...**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்**



# ஏக்கம்

பத்று யுத்தத்தில் முஸ்லிம்களிடம் தாங்கள் அடைந்த தோல்வியை மக்காவாசிகளினால் மறக்கவே முடியவில்லை. தோல்வியின் அவமானம் அவர்களுடைய உள்ளங்களை நஞ்சு போன்று உறுத்திக் கொண்டே இருந்தது. பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற வெறியிலே தகித்தார்கள்.

கடைசியிலே புகைந்து கொண்டிருந்த நெருப்பு பற்றி எரிந்தது. அபூ சுபியானின் தலைமையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மூவாயிரம் போர் வீரர்கள் மதீனா மீது படையெடுத்தார்கள். அவர்கள் யுத்த கீதங்கள் பாடினார்கள். போர் வீரர்களின் மான உணர்வு கிளறி விடப்பட்டது. போர்க்களத்திலிருந்து துரத்தியடிக்கப்படுவார்கள் என அச்சுறுத்தப்பட்டார்கள். இந்தப் படையெடுப்பு இஸ்லாத்திற்குப் பேரபாயமாக அமைந்தது. அவர்களுக்கு உறுதியான வெற்றி கிடைக்குமானால் சிறு தொகையினரான விசுவாசி களின் கூட்டம் அழித்தொழிக்கப்படுவார்கள்.

**எம்.ஏ. ரஹ்மான்**

தம்மைப் பின்பற்றும் விசுவாசிகளுடன் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஆலோசனை நடத்தினார்கள். அவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆனால், அவர்கள் எல்லோரிடமும் ''நாம் சத்தியத்தின் பக்கம் நிற்கின்றோம்'' என்ற அசைக்க முடியாத உறுதி இருந்தது. எனவே, 'ஜிஹா'திலே வாளைத் தூக்குவதெனத் தீர்மானித்தார்கள். ஆயிரம் விசுவாசி களைத் திரட்டிக் கொண்டு பெருமானார் புறப்பட்டார்கள்.

சிறிது தூரம் சென்றதும் அப்துல்லா பின் உபை என்பவன் முந்நூற்றுக்கும் அதிகமான போர் வீரர்களுடன் பெருமானாரைப் பிரிந்து சென்று விட்டான். அவர்களும் மக்காவாசிகளுடன் சேர்ந்து கொண்டார்கள். எனவே, கிட்டத்தட்ட எழுநூறு வீரர்களுடனே உஹத் மலைக்கு அருகில் எதிர்ப்படையை பெருமானார் சந்திக்க நேர்ந்தது.

பயங்கர யுத்தம் துவங்கியது. வெற்றி இரு பக்கத்தாருக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆரம்பம் முஸ்லிம்களுக்கு அனுகூலமாக அமைந்தது. வெற்றியுடன் போராடினார்கள். எதிரியின் வரிசையை முறியடித்தார்கள். எதிரிகள் பின்வாங்கினார்கள். அவர்களுள் சிலர் போர்க்களத்தை விட்டே ஓடினார்கள். இந்த ஆரம்ப வெற்றியைக் கண்ட முஸ்லிம்கள் ஒழுங்குமுறையை மறந்தார்கள். அவர்களுக்கென நியமிக்கப்பட்ட இடங்களை விட்டு முன்னேறத் தொடங்கினார்கள். இதனால் அவர்களுக்கிடையிலேயே ஒரு குழப்ப நிலை உருவாகியது.

முன்னெச்சரிக்கையுடன் இருந்த எதிரிகள் இந்தக் குழப்ப நிலையை அவதானிக்கத் தவறவில்லை. எனவே, அவர்கள் விரைவாக மீண்டும் ஒன்றுகூடி புதிய வேகத்துடன் பின்னாலிருந்து தாக்கத் தொடங்கினார்கள். முஸ்லிம் போர்வீரர்கள் அசத்தியத் துணிச்சலைப் பிழிந்து போராடினார்கள். ஆனாலும், ஒழுங்குமுறையை மீறியதால் ஏற்பட்ட குழப்ப நிலைக்கு அவர்களுடைய துணிச்சல் ஈடு கொடுக்கவில்லை. பல முக்கியமான முஸ்லிம்கள் போராடி வீழ்ந்தார்கள். ஆனால், எதிரிகளினால் முஸ்லிம்கள் நிர்மூலமாக்கப்படுவது மட்டும் தடுத்து நிறுத்தப்பட்டது.

பெருமானாரும் காயமுற்றார்கள். அவர்களுடைய நெற்றியிலே கற்கள் வெட்டிய காயங்கள் காணப்பட்டன. பற்கள் உடைந்தன. அவர்கள் அணிந்திருந்த இரும்புத் தொப்பி தலைக்குள் நெளிந்திருந்தது. புலனிழந்து அகழி ஒன்றிலே வீழ்ந்தார்கள். அலி (ரழியல்லாஹு அன்ஹு) பெருமானாரைத் தூக்கினார்கள்.

பெருமானாருக்குத் தெளிவு ஏற்பட்டதும் தமது முகத்திலிருந்த இரத்தத்தைத் துடைத்தபடி தமது கண்களை ஆகாயத்தை நோக்கி உயர்த்தி, ''அல்லாஹ் என்னுடைய மக்களைச் சரியான பாதைக்குக் கொண்டு வா. அவர்கள் தாங்கள் செய்வது என்ன என்பதைக் கூட அறியாதவர்களாகத் தவறிழைக்கின்றார்கள்'' எனப் பிரார்த்தித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிந்தியில் - ரஞ்சன் ஸக்ஸைனா
தமிழில் - ஸீயெம்மே அமீன்

# ஐ வில் டை

இது 1970 இல் நடந்த ஒரு சம்பவம். அப்போது நாங்கள் டில்லியில் வாழ்ந்து வந்தோம். எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெண் இருந்தாள். அவளை நாங்கள் 'ஸரலா ஆண்டீ' என்று அழைப்போம். அவள் ஆங்கில மோகம் உடையவள். அவளுடைய வயதோ அதிகம். ஆனால், குறைந்த வயதுடையவள் போலவே தோற்றமளித்தாள்.

ஒருமுறை பையன்களாகிய நாங்கள் எல்லோரும் அவளுடைய வீட்டுக்குச் சென்று ''இன்று மாலை நான்கு மணிக்கு நாங்கள் உங்களுடைய வீட்டுக்குச் சாப்பிட வருவோம்'' என்று சொன்னோம். அதற்கு ஸரலா ஆண்டீ, ''ப்ளீஸ் டோன்ட் கம் எட் ஃபோர் ஒ குளொக்... பிகோஸ் ஐ வில் டை எட் ஃபோர் ஒ குளொக்'' என்று கூறினாள்.

இன்று மாலை நான்கு மணிக்கு அவள் தற்கொலை செய்து கொள்வாள் என்று நாங்கள் நினைத்தோம். நாம் உடனே பொலிஸுக்கு ஃபோன் செய்தோம். பின்னர் சரியாக நான்கு மணிக்கு அவளுடைய வீட்டுக்குச் சென்றோம்.

நாம் அறையில் துவாரம் ஒன்றினூடாக உள்ளே பார்த்தபோது, சிரித்து புரண்டோம்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் கூட உள்ளே நடப்பவற்றைக் கண்டு இடி இடியென்று சிரிக்கலானார். ஏனென்றால், ஆண்டீ தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கவில்லை. மாறாக, வெளிநாட்டு ஹெயார்டையால் (தலைமுடி சாயம்) தனது சிகையைக் கறுப்பாக்கிக் கொண்டிருந்தாள்.



உண்மையிலேயே நாம் 'டை' என்பதன் சரியான பொருளை விளங்கிக் கொள்ளவில்லை.

'டை' என்ற சொல்லுக்கு இரு அர்த்தங்கள் உண்டு. ஒன்று 'செத்துப் போவது'; மற்றது 'மை பூசுவது'

---

சிந்தனைக் கதை

# ஒரு துளி புன்னகை

இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒருவர், ஒரு நாள் மாலையில் வேலை முடியும் தறுவாயில் இறைச்சி பதப்படுத்தும் உறைவிப்பான் அறைக்குள் ஏதோ வேலையாக இருந்தபோது, எதிர்பாராதவிதமாக அதன் தானியங்கிக் கதவு பூட்டிக் கொண்டு விட்டது.

உடனே பெரும் கூச்சலிட்டாலும் அவர் எழுப்பிய ஓசை வெளியே யாருக்கும் கேட்கவில்லை. மேலும், பெரும்பாலானோர் வேலை முடிந்து சென்று விட்டனர்.இன்னும் சிறிது நேரத்தில் குளிர்பனியில் உறைந்து இறக்கப் போகிறோம் என்று எண்ணி கவலை அடைந்தார்.

அப்போது கதவு திறக்கும் சப்தம் கேட்டது. உயிர் வந்தவராக வெளியே ஓடி வந்தார் அவர். அங்கே தொழிற்சாலை காவலாளி நின்று கொண்டிருந்தான். சந்தோஷத்தில் அவனை கட்டி தழுவிக் கொண்டார். அவனிடம், ''நான் உள்ளே இருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டார்.

''சார், நான் இங்க 10 வருசமா வேலை செய் றேன்... நீங்க ஒருத்தர் மட்டும்தான் என்னையும் ஒரு மனுசனா மதிச்சு காலைல வணக்கமும் சாயங்காலம் 'குட் பை' ரெண்டும் சொல்றவர். இன்னிக்கி காலை வணக்கம் சொன்னீங்க... ஆனா, சாயங்காலம் உங்களோட வணக்கம் என் காதில் விழவில்லை. உடனே சந்தேகம் வந்து ஒவ்வோர் இடமா தேடினேன்... அப்போதான் உங்களைக் கண்டுபிடிச்சேன்...'' என்றான்.

ஒருவருக்கொருவர் மற்றவர்களை தரக்குறைவாக எண்ணாமல் பரஸ்பரம் மரியாதை செலுத்திக் கொள்வது எப்போதுமே நன்மை பயக்கும் ஒரு விஷயம்தானே நண்பர்களே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்ல நண்பன்

- ஒரு நல்ல நண்பன் நூறு உறவினர்களுக்குச் சமம்
- விசுவாசமான நண்பன் வாழ்க்கையில் முன்னோடி
- நண்பனில்லாத வாழ்வு நாதியற்ற சாவு போல
- உண்மையான நண்பன் இறைவனின் அன்பளிப்பு
- முகம் சலிக்கும் போதிலும் துடிக்கும் நண்பனே கோடிச் செல்வம்
- அந்நியருடன் சோலையில் இருப்பதை விட நண்பனுடன் சிறையில் இருப்பது மேல்
- கேலிப் பேச்சிலும் கூட ஒரு நண்பனைப் புண்படுத்தாதே
- எந்த மனிதனும் தன்னில் முழுமையானவனல்ல அவன் நண்பர்களே மறுபகுதி
- உன் சொல்லுக்கு உன் உழைப்புக்கு உன் நண்பனுக்கு உண்மையாயிரு
- உண்மையான நண்பனுடன் உரையாடுவது உரக்கச் சிரிப்பதற்கு சமம்
- வளமுடன் வாழும்போது நண்பர்கள் உன்னை அறிவர்
- வறுமையில் வாழும்போது நீ நண்பர்களை அறிவாய்
- நண்பனுக்கு நல்லது செய் நட்பு நிலைத்திருக்கும்
- பகைவனுக்கு நல்லது செய் அவனை நண்பனாக்க

PUBLIC LIBRARY
JAFFNA



**எம்.எப்.எம். மின்ஷா**
**தரம் - 8**
**கெகுணகொல்ல தே.பா.**

# புளூடூத் Bluetooth®

புளூடூத் அல்லது திறக்கற்றை என்பது குறைந்த தொலைவிலுள்ள நிலையான அல்லது மொபைல் சாதனங்களிடையே தரவைப் பரிமாறிக் கொள்ள உதவும் ஒரு திறந்த தரனிலை (கம்பியில்லா) நெறிமுறை ஆகும். இது ஒத்திசைவுச் சிக்கல்களை வென்று பல சாதனங்களை இணைக்க வல்லது.

பெயரும் சின்னமும்

புளூடூத் என்ற சொல்லானது பழைய ஜேர்மனிய மொழியிலான 'ப்ளாடோன்' அல்லது தானிய மொழியிலான 'ப்ளாட்டேண்ட்' ஆகிய சொற்களின் ஆங்கில வடிவமாகும். இது பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த டென்மார்க்கின் முதலாம் ஹரால்ட் மன்னன் சிங்க் ஹெஸால்ட் ப்ளாடன்ட் என்பவனின் சிறப்புப் பெயராகும். இந்த அரசனுக்கு புளூபெரி பழங்கள் என்றால் மிகவும் பிடிக்கும். அதைச் சாப்பிட்டு அவனது பற்கள் எல்லாம் நீலக்கறை படிந்திருந்தன. இதனால் அம்மன்னனை 'புளூடூத்' என்றே அழைக்கத் தொடங்கினர். அம்மன்னன் வேறுபட்ட டானிஷ் பழங்குடியினரை ஒன்றிணைத்து அங்கிருந்த பல குறுநிலங்களை எல்லாம் ஒன்றாய் சேர்த்து ஒரே பேரரசாகக் கட்டமைத்தான். புளூடூத் தொழிநுட்பமும் அவனைப் போலவே கதவல் தொடர்பு நெறிமுறைகளை ஒரே தரநிலைக்குக் கொண்டு வரும் செயலைச் செய்கிறது என்பதால் இப்பெயர் வழங்கப்பட்டது.

ஜேர்மனிய எழுத்துக்களான ஹகால் **(Hagall)** மற்றும் பேர்கனான் **(Berkanan)** ஆகியவை இணைந்த இடாய்ச்சு இணைப்பெழுத்துக்களின் சேர்க்கையே புளூடூத் சின்னமாகும்.

பயன்கள்

புளூடூத் என்பது முக்கியமாக குறைந்த ஆற்றலைப் பயன்படுத்தி குறைவான எல்லைக்குள்ளான தகவல் தொடர்புக்காக உருவாக்கப்பட்ட ஒரு தரனிலையாகும். அது பயன்படுத்தப்படும் இரு சாதனங்களிலும் உள்ளமைக்கப்பட்டுள்ள குறைந்த விலை ட்ரான்சீவர் மைக்ரோசிப்களை அடிப்படையாகக் கொண்டது.

**எம்.கே.எம். பவாஸ்**
**சுலைமானிய்யா அ.க.**
**பன்டாரகொஸ்வத்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தோல்வி கிடையாது தோழி!!!

தோல்வி என்றால் நீங்கள் எதையும் சாதிக்க வில்லை என அர்த்தமாகாது; சில பாடங்களைப் படித்துள்ளீர்கள் என்றே அர்த்தம்.

தோல்வி என்றால் நீங்கள் தோற்றவர் என்று பொருளல்ல; நீங்கள் இன்னும் வெற்றியடைய வில்லை என்றே அர்த்தம்.

தோல்வி என்றால் அவமானம் அடைந்ததாக நினைக்க வேண்டாம்; முயற்சிக்கும் துணிவு உங்களிடம் உள்ளதாக நினையுங்கள்.

தோல்வி என்றால் உங்களால் பெற முடியாது என்பது பொருளல்ல; அதனை அடைய கொஞ்சம் தாமதமாகலாம் என்பதே பொருள்.

தோல்வி என்றால் உங்களிடம் புத்தியில்லை என்று அர்த்தமல்ல; வேறு யுக்திகளைக் கையாள வேண்டியதை உணர்ந்துள்ளீர்கள் என்றே அர்த்தம்.

தோல்வி என்றால் இறைவன் உங்களைக் கைவிட்டு விட்டான் எனப் பொருளல்ல; உங்க ளுக்கு வேறொரு நல்ல எதிர்காலத்தை நிர்ணயித் துள்ளான் என்பதே பொருளாகும்.

எனவே துணிந்து நில்
தொடர்ந்து செல்
தோல்வி... கிடையாது தோழி...!

**றஹீமா றாஸீக்**
**அல்முஃமினாத் பெ.அ.க., அக்குரணை**

# தெரிந்து கொள்ள...

1. றொபோர்ட் இயந்திரங்களை இயக்குவது எது? கணினி
2. கறையான் அரிக்காத மரம் எது? தேக்கு
3. உளவியல் துறையை உருவாக்கியவர் யார்? சிக்மன் பிராய்ட்
4. உலகத்திலே வைரத்தை அதிகளவில் வெட்டி யெடுக்கும் நாடு எது? தென்னாபிரிக்கா
5. தேனீக்கு எத்தனை இரைப்பைகள் உண்டு? இரண்டு
6. மிகப் பெரிய தீபகற்பம் எது? இந்தியா
7. இரவில் வானவில் தோன்றுமா? தோன்றும்
8. உலகில் அதிகமாக பயிரிடப்படும் பழமரம் எது? அப்பிள்
9. ஸ்பெய்ன் நாட்டின் தேசிய விளையாட்டு எது? காளை அடக்குதல்
10. தன்னைப் பற்றி அதிக புத்தகங்களை எழுதிய ஹாலிவுட் நடிகர் யார்? சார்லி சாப்ளி

**ஸப்ரினா புர்ஹானுல் டீன்**
**அல்முஃமினாத் பெ.அ.க.**
**அக்குரணை**



# இதோ இவரை விடவா உங்களுக்குத் தோல்விகள் அதிகம்...?

- *1831* இல் வியாபாரத்தில் தோல்வி
- *1832* இல் சட்டசபைத் தேர்தலில் தோல்வி
- *1834* இல் வியாபாரத்தில் மீண்டும் தோல்வி
- *1835* இல் அவரது காதலி மரணம்
- *1836* இல் அவருக்கு நரம்பு நோய் வந்தது
- *1838* இல் தேர்தலில் தோல்வி
- *1843* இல் காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
- *1848* இல் மீண்டும் காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
- *1855* இல் செனட் தேர்தலில் தோல்வி
- *1856* இல் துணை அதிபர் தேர்தலில் தோல்வி
- *1858* இல் செனட் தேர்தலில் மீண்டும் தோல்வி

1861 இல் அமெரிக்கா அதிபர் தேர்தலில் வென்று அமெரிக்கா ஜனாதிபதியானார். இத்தனை தோல் விகளையும் சந்தித்தவர் வேறு யாருமில்லை. உலகம் அறிந்த மிகவும் பிரபலமான அமெரிக்க அதிபர் 'ஆபிரஹாம் லிங்கன்' தான்.

அதிக தோல்விகள், அதிக பாடங்கள் இவையே வெற்றியின் இரகசியம்.

**ஆர். லிகா**
**நிக/நம்முவாவ மு.ம.வி.**
**நம்முவாவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும் அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. 'ஷஹ்ருள் முபாறக்' என்பதும் ரமழான் மாதத்தைக் குறிக்கும் ஒரு சிறப்புப் பெயராகும். இதன் கருத்து யாது?
2. இஸ்லாமிய வரலாற்றிலே அறிவியல்துறை, விஞ்ஞானத்துறை, கட்டடக்கலை போன்வற்றில் சகல சிறப்புக்களும் பொருந்திய புகழ் மிகு தலைநகராக விளங்கியது டமஸ்கஸ். இந்நகரைத் தலைநகரமாக்கிய கலீபா யார்?
3. முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் எத்தனையாவது தலைமுறையாவார்?
4. நபிகள் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் நெருங்கிய தோழர் ஒருவரும் நோய்வாய்ப்பட்டிருந்த அருமை மகளார் பாத்திமா நாயகி அவர்களின் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டி, ஸலாம் கூறி வீட்டினுள் நுழைய அனுமதி கோரினார்கள். வீட்டினுள் இருந்து ''வாருங்கள்'' என்ற பதில் வந்தது.

   ''மகளே என்னுடன் இன்னுமொரு தோழரும் இருக்கிறார்'' என்று நபிகளார் கூறியதும் பாத்திமா நாயகி அவர்கள், ''எனது உடலை மறைத்துக் கொள்ள ஒரு கந்தலான கம்பளி மட்டுமே உண்டு'' என்றதும், ''அருமை மகளே! அக்கம்பளியால் உடலை நன்றாக மூடிக் கொள்ளுங்கள்'' என்றார்கள் நபிகளார். அதுவும் முடியாமல் போனது. உடனே பெருமானார் அவர்கள் தனது மேலங்கியை உள்ளே எறிந்து உடலை நன்றாக மூடிக் கொள்ளுமாறு கூறிய பின்னரே தோழருடன் வீட்டினுள் நுழைந்தார்கள். நபிகளாருடன் சென்ற தோழரின் பெயர் என்ன?
5. சிறிய இணைவைத்தல் என்பது அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?
6. ஜமாஅத்தாகத் தொழுவதற்கு ஷர்த்துகள் உண்டு. அவற்றில் ஒன்றேனும் தவறினால் ஜமாஅத் செல்லுபடியாகாது. தொழுகையும் நிறைவேறாது. ஜமாஅத் தொழுகையின் ஷர்த்துகள் எத்தனை?
7. புனித அல்குர்ஆனில் ''யவ்முல் புர்க்கான்'' என்று ஒரு நாள் குறிப்பிடப்படுகிறது. அது எந்த நாளாகும்?
8. ஹஸரத் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சிக் காலத்தைக் கூறுக.
9. நாம் உயிருடன் இருக்கும் காலத்தில் ஒரு முகவரைக் கொண்டு தன் கருமங்களைச் செய்தல் இஸ்லாமிய வழக்கில் எச்சொல்லால் அழைக்கப்படுகிறது?
10. 'ஸஜ்ஜாதா சுகூர்' என்றால் என்ன?
11. அல்பிக்ஹுல் அக்பர் என்ற சட்ட நூலை இயற்றியவர் யார்?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. இலங்கையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிறுவப்பட்ட ஆண்டு எது?
2. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முதலாவது தலைவராக இருந்தவர் யார்?
3. இலங்கையில் 'வங்கிகளின் வங்கி' என அழைக்கப்படும் வங்கி எது?
4. சோல்பரி அரசியல் யாப்பு அமுலுக்கு வந்த ஆண்டு எது?
5. கடல் பிரயாணத்தின் மூலம் உலகம் உருண்டை வடிவம் என எடுத்துக் கூறியவர்? பசுபிக் சமுத்திரத்துக்கு 'பசுபிக்' (அமைதி) என்ற பெயரையும் இட்டவர், சுதேசிகளுடனான சண்டையின்போது இறந்தவர், அவர் யார்?
6. 'கங்கா நதி' என்ற பழைய பெயரைக் கொண்ட நதியின் தற்போதைய பெயர் என்ன?
7. 'கல்யாணி கங்கை' என்றழைக்கப்பட்ட நதியின் தற்போதைய பெயர் யாது?

விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

# الأَمَانَةُ

وَجَدَ عَامِرٌ فِيْ الْمَدْرَسَةِ قَلَمًا غَالِيًا، فَأَخَذَهُ، وَسَلَّمَهُ إِلَى مُدِيْرِ الْمَدْرَسَةِ ، فَشَكَرَهُ، وَلَمَّا وَقَفَ التَّلَامِيْذُ صُفُوْفًا سَأَلَ الْمُدِيْرُ عَنْ صَاحِبِ الْقَلَمِ وَسَلَّمَهُ إِيَّاهُ، وَمَدَحَ الْمُدِيْرُ عَامِرًا لِأَمَانَتِهِ، وَقَدَّمَ لَهُ كِتَابًا هَدِيَّةً لَهُ.

ஆமீர் பாடசாலையில் பெறுமதியான பேனையொன்றை கண்டெடுத்து பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்தான். அதிபர் ஆமிருக்கு நன்றி தெரிவித்தார். மாணவர்கள் அணியாக நின்றபோது பேனை உரிமையாளரை வினவி உரியவரிடமே அப்பேனாவை அதிபர் ஒப்படைத்துவிட்டு, ஆமீர் நம்பிக்கையாக நடந்து கொண்டதற்கு அவனைப் புகழ்ந்து பரிசாக அவனுக்கு ஒரு புத்தகத்தை அன்பளிப்புச் செய்தார்.

## இணைக்குக...

| الأَسْئِلَةُ | الأَجْوِبَةُ |
|---|---|
| ١. مَنْ وَجَدَ قَلَمًا؟ | قَدَمَ الْمُدِيْرُ لِعَامِرٍ كِتَابًا |
| ٢. هَلْ وَجَدَ عَامِرٌ قَلَمًا فِيْ الطَّرِيْقِ؟ | يَدُلُّ عَمَلُ عَامِرٍ عَلَى أَمَانَتِهِ |
| ٣. هَلْ كَانَ الْقَلَمُ غَالِيًا أَمْ رَخِيْصًا؟ | نَعَمْ، وَجَدَ الْمُدِيْرُ صَاحِبَ الْقَلَمِ |
| ٤. إِلَى مَنْ سَلَّمَ هَذَا الْقَلَمَ؟ | سَأَلَ الْمُدِيْرُ عَنْ صَاحِبِ الْقَلَمِ عِنْدَ وُقُوْفِ التَّلَامِيْذِ |
| ٥. هَلْ شَكَرَ مُدِيْرُ الْمَدْرَسَةِ عَامِرًا؟ | إِذَا وَجَدْتُ سَاعَةً فِي الْمَدْرَسَةِ أُسَلِّمُهَا إِلَى مُدِيْرِ الْمَدْرَسَةِ |
| ٦. مَتَى سَأَلَ الْمُدِيْرُعَنْ صَاحِبِ الْقَلَمِ؟ | نَعَمْ، شَكَرَالْمُدِيْرُ عَامِرًا |
| ٧. هَلْ وَجَدَ الْمُدِيْرُ صَاحِبَ الْقَلَمِ؟ | سَلَّمَ عَامِرٌ هَذَا الْقَلَمَ إِلَى مُدِيْرِ الْمَدْرَسَةِ |
| ٨. عَلَى أَيِّ شَيْئٍ يَدُلُّ عَمَلُ عَامِرٍ؟ | كَانَ الْقَلَمُ غَالِيًا |
| ٩. مَاذَا تَفْعَلُ إِذَا وَجَدْتَ سَاعَةً فِي الْمَدْرَسَةِ؟ | لَا، بَلْ وَجَدَ عَامِرٌ قَلَمًا فِيْ الْمَدْرَسَةِ |
| ١٠. مَاذَا قَدَّمَ الْمُدِيْرُ لِعَامِرٍ؟ | عَامِرٌ وَجَدَ قَلَمًا |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# كَيْفَ يَقْضِي بَسَّامٌ يَوْمَهُ الْمَدْرَسِيَّ.

يَسْتَيْقِظُ بَسَّامٌ مُبَكِّرًا صَباحَ كُلِّ يَوْمٍ، وَيَبْدَأُ يَوْمَهُ بِالوُضُوْءِ وَالصلَاةِ وَتلَاوَةِ القُرْآنِ، ثُمَّ يَغْتَسِلُ وَيرْتَدِي زِيَّهُ الْمَدْرَسِيَّ ثُمَّ يتَنَاوَلُ الفَطُوْرَ وَيَخْرُجُ مِنَ البَيْتِ وَيَذْهَبُ إِلَى الْمَدْرَسَةِ.

عِنْدَمَا يَدْخُلُ الفَصْلَ يُسَلِّمُ عَلَى الزُّمَلَاءِ ، وَيَدْرُسُ الْحِصَصَ حَتَّى السَّاعَةِ الثَّانِيَةِ نَهَارًا. وَعِنْدَمَا يَسْمَعُ صَوْتَ الجَرَسِ يَسْتَعِدُّ لِلرُّجُوْعِ إِلَى الْبَيْتِ ثم يَحْمِلُ حَقِيْبَتَهُ وَيَخْرُجُ مِنَ الفَصْلِ وَيَعُوْدُ إِلَى البَيْتِ فِيْ السَّاعَةِ الثَّانِيَةِ وَالنِّصْفِ تقْرِيْبًا.

*பஸ்ஸாம் ஒவ்வொரு நாள் காலையிலும் நேர காலத்துடன் கண்விழித்து எழும்புகிறான். அவன் வுழு செய்து தொழுது குர்ஆன் ஓதி தனது அன்றைய தினத்தை ஆரம்பிக்கின்றான். அவன் குளித்துச் சுத்தமாகி பாடசாலை சீருடை அணிந்து காலை உணவு உண்ட பின்னர் வீட்டிலிருந்து புறப்பட்டு பாடசாலைக்கு செல்கிறான்.*

*பஸ்ஸாம் வகுப்பில் நுழையும்போது தனது அனைத்து சகபாடிகளுக்கும் ஸலாம் சொல்கிறான். பாடசாலை ஆரம்பித்ததிலிருந்து பகல் 2 மணி வரை அவன் பாடவேளைகளை கற்றுவிட்டு மணி ஒலி கேட்டவுடன் வீடு திரும்பத் தயாராகி தனது புத்தகப் பையை சுமந்து கொண்டு வகுப்பிலிருந்து வெளியேறி 2.30 மணியளவில் வீடு சென்றடைகிறான்.*

## இணைக்குக...

| | |
|---|---|
| ١. مَتى تَسْتَيْقِظُ أَنْتَ؟ | أُذَاكِرُ دُرُوْسِي مَعَ زَمِيْلِي بَسَّامٍ. |
| ٢. بِمَ تَبْدَأُ يَوْمَكَ؟ | أَسْتَرِيْحُ قَلِيْلًا بَعْدَ أَنْ أَرْجِعَ مِنَ الْمَدْرَسَةِ. |
| ٣. مَتى تتَنَاوَلُ الفَطُوْرَ | أَرْجِعُ إِلَى بَيْتِي فِيْ السَّاعَةِ الثَّانِيَةِ وَالنِّصْفِ تَقْرِيْبًا |
| ٤. مَتى تَبْدَأُ مَدْرَسَتُكَ؟ | اَدْرُسُ دُرُوْسِي فِيْ الْمَدْرَسَةِ حَتَّى السَّاعَةِ الثَّانِيَةِ نَهَارًا |
| ٥. مَتى يَذْهَبُ وَالِدُكَ إِلَى مَكْتَبِهِ؟ | نَعَمْ،أُسَلِّمُ عَلَى زُمَلَائِي |
| ٦. هَلْ تُسَلِّمُ عَلَى زُمَلَائِكَ؟ | يَذْهَبُ وَالِدِي إِلَى مَكْتَبِهِ فِيْ السَّاعَةِ الثَّامِنَةِ |
| ٧. إِلَى مَتى تَدْرُسُ دُرُوْسَكَ فِي الْمَدْرَسَةِ؟ | تَبْدَأُ مَدْرَسَتِيْ فِيْ السَّاعَةِ السَّابِعَةِ وَالنِّصْفِ |
| ٨. مَتى تَرْجِعُ إِلَى بَيْتِكَ؟ | أَتنَاوَلُ الفَطُوْرَ فِيْ السَّاعَةِ السَّابِعَةِ. |
| ٩. هَلْ تَسْتَرِيْحُ قَلِيْلًا بَعْدَ أَنْ ترْجِعَ مِنَ الْمَدْرَسَةِ؟ | أَبْدَأُ يَوْمِيْ بِالْوُضُوْءِ وَالصَّلَاةِ. |
| ١٠. هَلْ تُذَاكِرُ دُرُوْسَكَ وَحْدَكَ أَمْ مَعَ زَمِيْلِكَ؟ | أَسْتَيْقِظُ فِيْ الصَّبَاحِ البَاكِرِ. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## Assalamu alaikum dear friends,

If someone **asks** you to write an essay on 'how you spent the vacation last month?' how would you write it? Will you write your essay as "I am going on a trip to Nuwareliya" or "I went on a trip to Nuwareliya?"

Obviously, you will choose the second form of sentence structure to write your essay, isn't it?

Why???

Because you are asked to write something that has already happened, you need to choose a sentence structure of the past tense. So throughout your essay you will say **I did that, I went there** and not so on.

**"I ate rice"** is different from **"I am eating rice"** This difference is known as tenses in the English language. **Tenses** allows you to know when something happens.

There are only three basic tenses in the English language: **the past, the present, and the future.**

- **The past tense** is used for anything that happened before this moment in time.
- **The present tense** is used for anything that happens right now or for general statements.
- **The future tense** is used for anything that will happen at some point later than right now.

**Example:**

- I learn English.
- I learned English the last two years.
- I will learn English next year.

Each main tense is divided into simple, progressive, perfect, and perfect progressive tenses.

| | **Present** | **Past** | **Future** |
|---|---|---|---|
| ***Simple*** | learn | learned | will learn |
| ***Progressive*** | am/is/are learning | was/were learning | will be learning |
| ***Perfect*** | have/has learned | had learned | will have learned |
| ***Perfect Progressive*** | have/has been learning | had been learning | will have been learning |

The chart above may look confusing. Try making sentences for each using the word "I"

Let me do one for you: **Perfect progressive**

**Present:** I have been learning **Past:** I had been learning **Future:** I will have been learning

I know this is hard. But this is not something that is impossible to understand. Now,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

try completing the following sentences

1. I ................................ an essay last month (write)
2. She ........................................ to London tomorrow (go)
3. Ahmed is ................................ ice-cream now (eat)
4. She ...................................... her aunt next week (visit)
5. He ........................................ to drive car when he was young (learn)

We will continue this lesson in coming issues as well.

## Hadith of the month

Ali ibn Hussein reported: The Messenger of Allah, peace and blessings be upon him, said:Verily, from the perfection of Islam is that a person leaves what does not concern him.
(Sunan At-Tirmidhi)

## *Laugh* a while:

**Sara:** Dad, We are going to be come rich soon!

**Dad:** How??

**Sara:** Our maths teacher is going to teach us how to convert cents into rupees!!!

Your Corner

## Sheba and the Monkey

Sheba, the queen of jungle, was very fond of babies, once, she announced "I order all animals to come to my palace with their babies. The animal that has the most beautiful baby will be given a prize".

All animals came to Sheba's palace with their babies; Sheba started inspecting the babies one by one. She came to a monkey and said "What an ugly baby! you will not get the prize"

The baby monkey began to cry. The mother monkey said "What a foolish queen she is! Who wants her prize! You are my jewel, my dear child; you are more precious than anything under the sky"

Mother's love cannot equals

**Jabeer Fathima Satheema**
**Grade 5**
**BT/Meeravodai Ameer Ali V.M**



## My Mother

Allah gives people many pleasant gifts. My mother is the most pleasant gift Allah has given me.

My mother loves me very much. I love her too. Her name is Haleema. She studied in Al Manar Central College. My mother wakes up early in the morning every day. She then cleans up the house and prepares our breakfast. She also helps us in getting ready to school.

In the evening, mother helps us in our school lessons. She also teaches us good values. She tells us to respect the elders and become good citizens. My mother is the most beautiful and kind person I have ever seen in my life time.

**Salwa Binthy Muzammil-06**
**Al-Aqsa M.V, Watadenya**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Time

- To realize the value of one year, ask a student who has failed a final exam.
- To realize the value of one month, ask a mother who has given birth to a premature baby.
- To realize the value of one week, ask an editor of a weekly newspaper.
- To realize the value of one hour, ask a driver who drives with an oxygen cylinder.
- To realize the value of one minute, ask the person who has missed a train, bus or plane.
- To realize the value of a second, ask a person who has survived an accident.
- To realize the value of one milli-second, ask the person who ah won a silver medal in the Olympics.
- Time waits for no one, treasure every moment you have. You will treasure it even more when you can share it with someone special.

✍ **Sidhique Fathima Rina**
**Hairiya Ladies College**
**Colombo**

# *Importance of* learning English

English language is no longer a monopoly of the English people. Even in the European community it has become the predominant language. More than 75% of the short messages and ordinary telephone calls are made in English. Above all, internet access can be made through English only. This acts as the code that binds the human beings and the society and the whole universe.

Along with globalization it is a must to learn English. Can we merge with the global village without knowing an international language? It is impossible. It is a pity some have a phobia towards this great assert. I think it is easy to learn and write, if have the need to know it.

As we know in government schools, English is taught only as a second language. The number of citizens who can speak English fluently are very few. Learning English for forty minutes per day is not sufficient to get a sufficient knowledge. If we can make a better environment for the child to learn this, I think it would be more successful. We are glad that the government has already implemented some special programs to sustain the language among schools. English language is the only torch that dispels the gloom of the higher education.

✍ **Thoufeek Thasmila Begam**
**G.C.E A/L**
**NK/Abukkagama M.M.V**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

## I learn every day

A 61/ 5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



2017 - ௫௦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

## நூல் அறிமுகம்




தலைநகரின் தனித்துவ மாபெரும் புத்தக களஞ்சியமான இஸ்லாமிக் புக் ஹவுஸின் வெளியீட்டகத்தின் இன்னொரு மைல்கல்லாக 'வடிவமைப்பும் நிருமாணத் தொழிநுட்பவியலும்' உசாத்துணை நூல் வெளிவருவதில் நாங்கள் மகிழ்வடைகின்றோம்.

இந்த நூற்றாண்டு தொழிநுட்பத்திற்கான ஆண்டு என உலகம் உரத்து முழங்கும்போது அத்துறையில் நமது மாணவச் செல்வங்களும் சிகரத்தை எட்டிப்பிடிக்க வேண்டும் என்கிற உன்னத இலக்குடன் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு காலத்தின் தேவையை கருத்திற்கொண்டு இந்த துறையில் அதீத கவனத்தைச் செலுத்தும் இத்தருணத்தில், இத்துறையின் சிறந்த அனுபவமிக்க எஸ். முஹம்மத் றிஸாத்கான் இந்த நூலை மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக செதுக்கியுள்ளார்.

ஆசிரியர் எஸ். முஹம்மத் றிஸாத்கான் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலைமாணிப் பட்டத்தையும் காரியாலய நிர்வாகத்தில் டிப்ளோமா பட்டத்தினையும் தற்போது இந்திய பல்கழைக்கழகத்தில் முதுமாணி பட்டத்தையும் தொடர்ந்து கொண்டிருக்கிறார். கடந்த ஐந்து வருடங்களில் இத்துறையில் ஆழமாக ஈடுபட்டு வரும் ஆசிரியர் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் தன் பாடசாலையில் மாணவர்களை அதிக வீத சித்தியைப் பெற வைத்து சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக நவீன வடிவமைப்புக்களுடன் தரமிக்க தாள்களில் அச்சிடப்பட்ட இந்நூல், நிச்சயம் உங்கள் வெற்றிக்கு உறுதியான உசாத்துணையாக இருக்கும். தனித் தனி நூல்களாக மாத்திரமின்றி, மொத்தமாகவும் நீங்கள் இந்நூலை பெற்றுக் கொள்ளலாம். தேசத்தின் எப்பகுதியில் இருந்தும் தபால் மூலமாகவும் (VPP) பெற்றுக் கொள்ளலாம்.

அது மாத்திரமின்றி, நீங்கள் இருந்த இடத்திலயே IBH இன் வலைத்தளத்தின் www.ibh.lk மூலம் உங்கள் கரம் கிடைக்கச் செய்யலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
இல. 77 தெமடகொட வீதி,
மருதானை, கொழும்பு 09.

**தொடர்புகளுக்கு:**
**0112 684851, 0112669191**

---

**அறிவுக் களஞ்சியம்...**
**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. அருள் நிறைந்த மாதம்
2. முஆவியா (ரழி) அவர்கள்
3. 51 ஆவது தலைமுறையாகும்
4. இம்ரான் இப்னு ஹஸீன் (ரழி) அவர்கள்
5. ஷிர்குல் அஸ்கர்
6. 7
7 புனித பத்து யுத்த தினம்
8. 10 வருடம் 6 மாதங்கள்
9. வகாலத்
10. நன்றி செலுத்தும் தொழுகை
11. இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்கள்

**பொது அறிவு**

1. 1979
2. பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே
3. இலங்கை மத்திய வங்கி
4. 1947
5. பேர்டிணண்ட் மகலன்
6. மகாவலி கங்கை
7. களனி கங்கை

---

## எண்ணங்களின் வண்ணங்கள் - 22

**தலைப்பு: நோன்பு துறக்கும் நேரம் (இப்தார்)**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 மே 25**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 18

## பிரித்தானியர் காலப் பிரிவில் முஸ்லிம்கள் - பகுதி II


அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்தெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்


1796 இல் பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றிக் கொண்டனர். எனினும், இலங்கை முழுவதையும் அவர்களால் கைப்பற்ற முடியவில்லை. கண்டி தனி அரசாகவே இருந்தது. 1815 இல் கண்டி கைப்பற்றப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் அவர்களது ஆதிக்கத்துக்கு உட்பட்டது. எனவே, 1796-1948 வரையான காலப் பிரிவு இலங்கையின் அரசியல் வரலாற்றில் 'பிரித்தானியர் காலம்' எனப்படுகின்றது.


ஒல்லாந்தரின் இலங்கைப் பிரவேசம் கண்டி அரசியலில் பெரும் பாதிப்புக்களை உருவாக்கியதால் அவர்களை இலங்கையில் இருந்து அகற்ற வேண்டிய தேவை கண்டி அரசுக்கு இருந்தது. பிரித்தானியர் ஆரம்பத்தில் கண்டி அரசின் ஊடாகவே இலங்கையில் தமது அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றனர். இதன் பேறாகவே கீர்த்தி ஸ்ரீ ராஜ சிங்கன் (1742-1782) மன்னனின் காலப் பிரிவில் ஜோன் பைபஸ் பிரித்தானியரின் தூதுவராக கண்டிக்கு வந்தார். பிரித்தானியரின் உதவியோடு ஒல்லாந்தரை இந்நாட்டில் இருந்து வெளியேற்றுவதே கண்டி மன்னனின் நோக்கமாக அமைந்தது. இறுதியில் கண்டி பிரதானிகளுக்கும் கண்டியின் இறுதி மன்னனான ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனுக்கும் இடையே ஏற்பட்ட அரசியல் பிணக்குகள் 1815 இல் கண்டியை பிரித்தானியர் கைப்பற்றக் காரணமாக அமைந்தது.

பிரித்தானியர் 1796 இல் இலங்கையில் கால் பதித்தது முதல் முஸ்லிம்களோடு நட்புறவுடன் நடந்து கொண்டனர். ஒல்லாந்தர் முஸ்லிம்களுக்கு எதிராக விதித்திருந்த பல தடைகள் பிரித்தானியர்களால் அகற்றப்பட்டன.

உண்மையில் இதன் நோக்கம் முஸ்லிம்களுக்கு சலுகைகள் வழங்குவதன் மூலம் அவர்களை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதாகும். அதிலும் குறிப்பாக, கண்டி இராச்சியத்துடன் முஸ்லிம்கள் கொண்டிருந்த நல்லுறவை சீர்குலைப்பது பிரதான நோக்கமாக அமைந்தது. இலங்கையில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நிலவிய நல்லுறவை தமது பிரித்தாளும் கொள்கையினால் சீர்குலைக்க திட்டமிட்டு செயற்பட்டனர்.

பிரித்தானியர் முஸ்லிம்களுக்கு சார்பாக மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஆளுநர் பிரடெரிக் நோர்த் 1799, 1806 ஆகிய ஆண்டுகளில் மேற்கொண்ட இரு நடவடிக்கைகள் பிரதான இடத்தைப் பெற்றன. 1799 இல் அவர் முஸ்லிம்களின் விவகாரங்கள் தொடர்பான சட்டங்களும் 1806 இல் முஹம்மதிய சட்டங்களும் பாதுகாக்கப்படுமென உறுதி அளித்தார். முஸ்லிம்கள் மீது ஒல்லாந்தர் விதித்திருந்த 'ஊழியம்' எனும் ஆள்வரியை அறவிடக் கூடாது என அறிவித்தார்.

அவ்வாறே, கொழும்பில் முஸ்லிம்கள் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் ஒல்லாந்தர்களால்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுக்கப்பட்டிருந்தது. 1833 இல் பிரித்தானியர் இத்தடையை நீக்கினர். இதனால் முஸ்லிம்கள் கொழும்பில் சொத்துக்களைக் கொள்வனவு செய்ய முடிந்தது. இதனால் கொழும்பில் பிரதான வணிகத் தலங்களும் முஸ்லிம் குடியிருப்புக்களும் அதிகரித்தன. உண்மையில் பிரித்தானியர் முஸ்லிம் களுக்கு வழங்கிய இந்த சலுகைகள் சாதகமான பொருளாதார, சமூக நன்மைகளைத் தந்தாலும் பின்னாலிருந்த பிரித்தானியரின் மறைமுக நோக் கங்களையும் ஓரளவு ஈடேற்றியது. முஸ்லிம்கள் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்பு களைப் பயன்படுத்தி கண்டி இராச்சியத்தின் நிலை பற்றிய தகவல்களைப் பெற முடிந்தது. இது கண்டி அரசனுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நிலவிய நல்லுறவைப் பாதித்தது. பிரித்தானியர் பின்பற்றிய பிரித்தாளும் கொள்கை கண்டி ஆட்சியாளர்கள் முஸ்லிம்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையைத் தோற்றுவித்தது. அவர்களை பிரித்தானி யரின் உளவாளிகளாக பார்க்கும் நிலை உருவானது. 1802 ஆம் ஆண்டு கண்டியில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த முஸ்லிம் வியாபாரிகள் குழு ஒன்று கண்டி மகாதிகாரம் பிலிமதலாவையினால் புத்தளத்தில் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்களது வணிகப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இதனை அறிந்த ஆளுநர் நோர்த் 1803 ஆம் ஆண்டு கண்டி யைக் கைப்பற்ற ஒரு படையை அனுப்பினார். எனினும், இம்முயற்சி தோல்வியடைந்தது. இந்தப் படையெடுப்புக்கான வேறு பல காரணங்களும் இருந்தன.

கண்டி இராச்சியம் கி.பி. 1815 பெப்ரவரி 18 ஆம் திகதி பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது. ஏனைய ஐரோப்பிய இனத்தவர்களைப் போல் அல்லது ஆயுத பலத்தை விட அறிவுப் பலத்தைப் பயன்படுத்தி கண்டியைக் கைப்பற்றுவதே ஏற்புடையது என்பதை பிரித்தானியர் நன்கு உணர்ந்திருந்தனர். 1805 இல் இலங்கையின் ஆளுநராகப் பொறுப்பேற்ற தோமஸ் மெயிட்லன்ட் இதனை நன்கு உணர்ந்திருந்தார். ஜோன்டொய்லி என்ற அரச உத்தியோகத்தரை அதற்கு பயன்படுத்திக் கொண்டார். இருவரும் வகுத்துக் கொடுத்த பாதையில் சென்ற அடுத்த ஆளுநர் ரொபட் பிராங்ன்ட்றிக் கண்டியை கைப் பற்றிக் கொண்டார்.



கண்டி இராச்சியத்தின் இறுதிக் கூறுகளில் முஸ்லிம்களிடத்தில் இருவேறுபட்ட பண்புகள் வெளிப்பட்டு நிற்பதை அவதானிக்கலாம். பிரித் தானியர்களுடன் இணைந்து இருந்ததைப் போலவே கண்டி அரசனின் படையிலும் முஸ்லிம்கள் இடம் பெற்றிருந்தனர். ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் படையில் கி.பி. 1810 இல் 250 முஸ்லிம்கள் இடம்பெற்றி ருந்தனர். அன்றைய இலங்கைச் சூழலில் இவ்விரு அணுகுமுறைகளும் தேவையாக இருந்தன.

பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றியதன் பின்னர் எதிர்நோக்கிய முதல் பிரச்சினையாக ஊவா வெல்லஸ்ஸ கலகம் அமைந்தது. 1817 செப்டெம்பர் தொடக்கம் 1818 செப்டெம்பர் வரை நடைபெற்ற இக்கலகம் பிரித்தானியருக்கு எதிரான இலங்கை மக்களின் உணர்வு வெளிப்பாடாக அமைந்தது. இக்கலவரத்தில் முஸ்லிம்கள் பிரித் தானியர்களுக்கு சார்பாக நடந்து கொண்டனர். கரையோரப் பகுதிகளில் இருந்து மலையகப் பகுதிகளுக்கு பிரித்தானிய படையினருக்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்ல தமது பொதி மாடுகளைக் கொடுத்து உதவினர். முஸ்லிம்களின் இச்செயற்பாடு அவர்கள் இதுவரை கடைப்பிடித்த போக்குகளுக்கு மாற்றமாக அமைந்தது. பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றும் வரை சிங்கள அரசர்களுடன் நல்லுறவு பேணி விசுவாசத்துடன் நடந்து கொண்ட அவர்கள், 1815 இன் பின்னர் இவ்வாறு மாறியமைக்கான பிரதான காரணி பிரித்தானியர்களுக்கு ஆதரவாக நடக்க நிர்ப்பந்திக்கப்பட்டமையே எனலாம்.

பிரித்தானியர் இந்தியாவில் முஸ்லிம்களை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டதைப் போலவே இலங்கையிலும் பயன்படுத்திக் கொண்டனர். அவர்களின் இப்பிரித்தாளும் கொள்கை ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நிலவிய இன ஐக்கியத் தையும் நல்லுறவையும் சீர்குலைத்தது. நம்பிக் கையீனத்தையும் சந்தேகத்தையும் தோற்றுவித்தது என வரலாற்றுப் பேராசிரியை கலாநிதி லோனா தேவராஜா கவலையோடு குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# முயற்சி

சர்மிலா ஏ. றாஸிக்
காத்தான்குடி - 05



பாடசாலையின் அழகுக்கும் குளிர்ச்சிக்கும் ஆதாரமாய் விளங்கியது அந்த ஆலமரம். நிழலுக்கும் இதமான இலைகளின் அசைவுகளின் ஓசைக்கும் நாடி வரும் எத்தனையோ பேரில் அன்று சசியும் ஒருவன். வாட்டமான முகமும் வதனத்தில் கண்ணீர் துளிகளும் கொண்டவனாக வாடி வதங்கி உட்கார்ந்திருந்தான். தோல்வியும் அதனால் வரப்போகும் அவமானமும் ''நான் எதற்கும் பெறுமதியற்றவன்'' என்ற மனப்பாங்கும் அவனை வாட்டி வதைத்தன. சிரமத்துடனான வாழ்க்கைப் போராட்டத்தில் 11 வருடங்கள் கற்ற கல்விக்கான பெறுபேறு சசிக்கும் சிறப்புத் தேர்ச்சியாக இருக்கவில்லை. தனது பெற்றோரிடம் சொல்லவும் முடியாது அவமானம் ஏற்பட்டதாக எண்ணி நீண்ட நேரம் அங்கே உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரம் சென்றதும் அவன் அருகே தனது நண்பர்கள் கூட்டத்தோடு வந்தான் சசியின் வகுப்பு நண்பன் குமார். ''என்னடா சசி எப்படி? நீ இரண்டு பாடங்கள் சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெறவில்லை. எல்லாவற்றையும் பெயர்ப் பலகையில் பார்த்து விட்டுத்தான் வந்தேன். ம்... நீ கொடுத்து வைத்தது அவ்வளவுதான். நான் எவ்வளவோ உனக்கு சொல்லியிருப்பேன். வசதியும் வாய்ப்பும் இல்லாத உனக்கு படிப்பெல்லாம் சரி வராது என்று. எங்களப் போல ஸ்பெஷல் வகுப்பு போய் படிக்க வேண்டிய பரீட்சையை சைக்கிள் கடையில் கூலிவேலை செய்து உனக்கு எப்படி தேர்ச்சி பெற முடியும்? உன் குடும்ப நிலைக்கு இதெல்லாம் சரி வராது. போ... போய் சைக்கிள் கடையைப் பாரு தம்பி'' என்று ஏளனமான வார்த்தைகளை சசியின் மீது கொட்டியவனாக கர்வத்தோடு அவ்விடத்தை விட்டு நீங்கினான் குமார்.

சுட்ட புண்ணிலே வேல் பாய்ச்சியது போன்ற அவனது வார்த்தைகள் சசிக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தன. படித்த பாடசாலைக்கு மீண்டும் செல்லாது தனது தாத்தாவின் ஊருக்குச் சென்று, அங்கே உள்ள ஒரு பாடசாலையில் மீண்டும் கற்று, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மீண்டும் வெற்றி பெறுவேன் என்ற முடிவோடு அம்மரத்தினை விட்டு நீங்கிச் சென்றான்.

நாட்கள் சென்றன. அன்று அந்த பெரிய கார் நிறுவனத்தின் வாயிலில் சற்று அமைதியின்றி சலசலப்புடன் காணப்பட்டது. அது 10 பேரை தெரிவு செய்யவுள்ள நேர்முகப் பரீட்சைக்கான நாள். சுமார் 50 பேர் வரிசையாக காத்து நின்றனர். அப்போது அந்தக் கூட்டத்தினை விலக்கியவாறு வேகமாக வந்தது ஒரு கறுப்பு நிற கார். காரிலிருந்து கம்பீரமாக ஒரு வாலிபர் இறங்கியதை பார்த்தவாறு இவர்தான் நிறுவனத் தின் தலைவர் என்று பேசிக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



PUBLIC LIBRARY
JAFFNA

வேக நடைபோட்டு தனக்கு சொந்தமான குளிரூட்டப்பட்ட அறையில் நுழைந்ததும் நேர்முகப் பரீட்சை ஆரம்பமானது. ஒவ்வொருவராக உள்ளே சென்று வெளியேற இறுதியாக தனது சான்றிதழ்களோடு உள்ளே நுழைந்தவன்தான் குமார். ''இந்த வேலையாவது தனக்கு கிடைத்துவிட வேண்டும் இறைவா!'' என்ற பிரார்த்தனையோடு தலைகுனிந்தவனாக உள்ளே நுழைந்தான் குமார். சான்றிதழ்களை நீட்டினான். முகத்தை சரியாக நோக்காதவனாய் இருந்தான்.

''உங்கள் பெயர் குமார்தானே?'' என்ற கேள்விக்குப் பதில் கூற முகத்தை நோக்கினான்; அதிர்ந்தே போனான். அந்த பேரதிர்ச்சியால் பேச்சு வராது தடுமாறினான். தன் முன்னால் இருப்பது அவன் ஒருநாள் கேவலப்படுத்திய ஏழை நண்பன் சசி. அவனால் அதிர்ச்சியில் இருந்து மீண்டு வர முடியாது ''ஆ... ஆ... ஆம் சேர் நான் குமார்'' என்றான்.

புன்னகையோடு தன் முன்னால் இருக்கும் நண்பனை பார்த்த குமார், ''நீங்க... சசி?''

''ஆம் குமார்... நான் உன் நண்பன் சசிதான்... நீ எப்படி இருக்கிறாய் குமார்? உன்னை கண்டு நீண்ட நாட்களாகி விட்டதே!''

குமாரினால் எதுவும் பேச முடியவில்லை. தன் தவறு அவன் கண்களின் முன் நின்றது. அன்றொரு நாள் கேவலப்படுத்திய நண்பன் தன்னோடு இவ்வாறு பேசியது குமாரின் கண்களை குளமாக்கியது.

''குமார் ஏன் பேசாமல் இருக்கிறாய்? அன்று நீ எனக்கு கூறிய ஏளனமான வார்த்தைகளே என் முயற்சிக்கு ஏணிப்படிகளாக இருந்தன. உணர்ந்து கொள் குமார். எவரையும் நாம் எந்தக் கட்டத்திலும் தாழ்வாக நோக்கக் கூடாது. இறைவன் எல்லாம் இயலும் என்ற தன்மையோடுதான் இவ்வுலகிற்கு அனுப்பியுள்ளான். முயற்சிக்கு முடியாது என்ற தன்மை கிடையவே கிடையாது. நீ கூறியபடி சைக்கிள் கடையில் கூலிவேலை பார்த்தவனாகவே கற்று சிறப்பு தேர்ச்சி பெற்றேன். என் பண்புகளும் பொறுமையும்தான் இவ்வளவு பெரிய நிலைக்கு என்னை உயர்த்தின'' என்றான் சசி.

''என்னை மன்னித்து விடு சசி... நான் மற்றவர்களை மதிக்காது கர்வத்தோடு அன்று நடந்து கொண்டது தவறு என்பதை இன்று நன்றாக உணர்ந்தேன்.''

''சரி குமார் உன்னை மன்னித்து விட்டேன். இந்த நிறுவனத்தில் வேலைவாய்ப்பை நீ நிச்சயம் பெறுவாய்'' என்று கூறியவனாக விடைபெற்றான் சசி.

'சசியைப் போன்று ஊக்கமும் முயற்சியும் தன்னடக்கமும் உனக்கு மட்டுமல்ல ஒவ்வொரு மாணவ மாணவியருக்கும் இருந்தால் மாணவ சமுதாயமே சிறப்படையும்' என்று குமாரின் ஆழ்மனம் அவனுக்கு அறிவுரை கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# “உனக்கான பாதையை தெரிவு செய் உலகம் உன்னை திரும்பி பார்க்கும்”



✍ வ. முஹம்மத் நபீல்

அப்துல்லாஹ் பாரிஸ் பேருவளை மஹகொடையை பிறப்பிடமாக கொண்டவர். இவரது தந்தை பாரிஸ் டுபாயில் வேலை செய்து கொண்டிருக்கிறார். பேருவளை எஸ்.எல்.எம். சம்சுதீன் பாடசாலையில் தரம் பத்தில் கற்றுக் கொண்டிருக்கும் அமைதியான தோற்றம் கொண்ட நமது பாரிஸ் அப்துல்லாஹ் இலங்கையின் தேசிய உதைப்பந்தாட்ட அணியில் *15* வயதிற்கு உட்பட்டோருக்கான அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். அவரது சாதனையைப் பற்றி இம்மாத அகரம் உங்களுடன் பேசுகிறது...

**அகரம்:** சாதிக்க பல துறைகள் இருந்தும் எதற்காக விளையாட்டுத் துறையை தெரிவு செய்தீர்கள்?

**எஸ்.எல்.எம். சம்சுதீன்:** சாதிக்க பல துறைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். கல்வி, கண்டுபிடிப்பு என பல்வேறு துறைகளில் இன்று தேச மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பலர் சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், என்னதான் திறமைகள் இருந் தாலும் ஊக்குவிக்க பலர் இருந்தாலும் எமக்குரிய துறையை நாம் மிகச் சரியாக அடையாளம் காணும்போதுதான் எம் மால் சாதனைகள் நிகழ்த்த முடியும். எனக்கான துறை விளையாட்டுத்துறை என அடையாளம் கண்டபோது, அதில் எனது முயற்சியையும் கவனத்தையும் ஒன்றுகுவித்து சாதிக்க ஆரம்பித்துள் ளேன், அல்ஹம்துலில்லாஹ்.

**அகரம்:** உங்கள் ஏனைய திறமைகளைப் பற்றிக் கூற முடியுமா?

**எஸ்.எல்.எம். சம்சுதீன்:** உதைப்பந்தாட்டம் மட்டுமின்றி இன்னும் பல விளையாட்டுக்களிலும் நான் கடந்த காலங்களில் சாதித்துள்ளேன்.

- உயரம் பாய்தல்
- நீளம் பாய்தல்
- ஓட்டப் போட்டிகள்

என பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பாடசாலை மட்டம் முதல் மாகாண மட்டம் வரை பல தரங்களுக்கு சென்று கிண்ணங்களும் சான்றிதழ்களுமாக பல வெற்றிகளைப் பெற்றுள்ளேன். அது மாத்திரமின்றி, கல்வியிலும் பின்தங்காமல் எனது ஆளுமையை வெளிப்படுத்தி வருகின்றேன்.

**அகரம்:** இந்த வெற்றிகளுக்காக நீங்கள் யாருக்கு நன்றி சொல்ல விரும்புகின்றீர்கள்?

**எஸ்.எல்.எம். சம்சுதீன்:** தாயும் தந்தையும்தான் நன்றிக்குரிய வர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்கள். தங்களை தியாகம் செய்து என்னை கொஞ்சம் கொஞ்சமாக செதுக்குவது அவர்கள்தான். இது மட்டுமல்ல, வாழ்வில் நான் படைக்கும் ஒவ்வொரு சாதனையின் பின்னாலும் அவரது கரங்கள் இருக்கும்.

அதன் பின் எனது மாமா காமில். அவர் எனக்காக பல தியாகங்களை முதலிட்டு எனது வெற்றிக்காக மிகவும் கஷ்டப்படுகின்றார். அதேபோன்று, எனது மதிப்பிற்குரிய ஆசிரியர் சர்பான் (நளீமி) அவர்களும் எனது வெற்றிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய ஊக்குவிப்பாளராக இருக்கின்றார். அத்துடன், அதிபர் உட்பட ஏனைய ஆசிரியர்கள், உறவினர்கள் என அனைவரும் எனது வெற்றிக்கு உதவியாளர்களாகவும் ஊக்குவிப்பாளர்களாகவும் இருக்கின்றார்கள்.

**அகரம்**: சாதனைப் பயணத்தில் நீங்கள் எதிர் கொண்ட முக்கிய சவால்கள் என்ன?

**எஸ்.எல்.எம். சம்சுதீன்**: பாடசாலையில் விளையாட்டுப் பயிற்சிக்காக ஆசிரியர் ஒருவர் இல்லாமை முக்கிய சவாலாகும். அவ்வாறு ஒருவர் இருந்திருப்பின் இன்னும் பல சாதனையாளர்களை எம்மால் உருவாக்க முடியுமாக இருந்திருக்கும்.

சாதனை புரிய முயற்சி, ஊக்கம் என்பன எவ்வளவு அவசியமோ அதேபோல அத்தியாவசியமான வளங்களும் அவசர அவசியமாகும்.

அதேபோன்று, நான் தேசிய அணிக்காக தெரிவு செய்யப்பட்ட சமயம் மிகக் கடுமையான சின்னம்மை பீடித்து சுகவீனமுற்றிருந்தேன். வீட்டை விட்டு வெளியிறங்கவோ, வெளியே எங்கும் பயிற்சிக்காக செல்லவோ முடியாத நிலை காணப்பட்டது. இந்த நிலை கண்டு என் மீது அக்கறை கொண்ட அனைவரும் கடுமையாக கவலைப்பட்டனர். ஆனால், அல்லாஹ்வின் அருளால் அந்த நிலையில் இருந்து மீண்டேன்.

அதன் பின்னாலும் உபாதை ஒன்று ஏற்பட்ட காலில் மீண்டுமொரு காயம் ஏற்பட்டது.

**அகரம்**: நமது சமூகத்திலும் இன்னும் பல மாணவர்கள் சாதனை புரிய காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் அறிவுரை என்ன ?

**எஸ்.எல்.எம். சம்சுதீன்**: அதிகம் சொல்லத் தேவையில்லை, உங்களுக்கான துறையைத் தெரிவு செய்யுங்கள். உழைப்பை அதில் முதலிடுங்கள். சிக்கல்களையும் சவால்களையும் புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள், உலகம் ஒருநாள் உங்களைக் கொண்டாடும்.

---

**08 ஆம் பக்கத் தொடர்...**

உடல் பலம் பெறும் வரையில் அங்கேயே சில வாரங்கள் காத்துக் கிடந்து விட்டு தமது பெற்றோர் எவ்வழியில் இங்கே வந்து சேர்ந்தார்களோ அதே வழியில் மீண்டும் இந்தக் குஞ்சுகள் அநாதையாக கடலை நோக்கிப் பயணிக்க ஆரம்பிக்கின்றன. இவை அளவில் மிகச் சிறியவையாக இருப்பதனால் பெரிய மீன்கள் வரும்போது இருந்த மிகப் பெரும் சவால்கள் இவற்றுக்கு இருப்பதில்லை. நீரின் திசையிலேயே இவை செல்ல வேண்டி இருப்பதனால் மிக இலகுவாக கடலைச் சென்றடைய முடியும். கடலை நோக்கிச் செல்லும் பயணத்தை சுமோல்டிபிகேஷன் (Smoltification) என்பார்கள்.

**முகத்துவாரங்களில்...**

குதித்தோடும் நீர்வீழ்ச்சிகளிலும் பாய்ந்தோடும் பள்ளத்தாக்குகளிலும் பல ஆயிரம் கி.மீ. தூரம் பயணம் செய்து இறுதியாக நன்னீர் கடலில் வந்து கொட்டும் முகத்துவரங்களை இவை வந்தடைகின்றன. வந்தவுடன் கடலுக்குள் பிரவேசித்தால் இக்குஞ்சு மீன்கள் உடனடியாக உயிரிழக்க வேண்டி ஏற்படும் என்பதனை இவற்றுக்கு அல்லாஹ் முன் கூட்டியே கற்றுக் கொடுத்திருப்பதனால் இவை உப்பு நீரில் வாழத்தக்கவாறு தமது உடலைத் தயார்படுத்திக் கொள்ள சில நாட்கள் முகத்துவாரங்களில் இருந்து பயிற்சி எடுக்கும். பயிற்சியை முடித்துக் கொண்டு ஒன்றன் பின் ஒன்றாக சமுத்திரத்திற்குள் பிரவேசித்து விடும்.


மீண்டும் வழமைபோல் அவற்றின் சமுத்திர வாழ்க்கை ஆரம்பமாகும். அங்கேயே உண்டு அங்கேயே வளர்ந்து மூன்று வருடங்களை ஓட்டி விட்டு இனப்பெருக்கம் செய்யும் பருவத்தை அடைந்ததும் மீண்டும் இவை தமது பெற்றோர் பயணம் செய்தது போன்று, தாம் சிறு பருவத்தில் எந்த வழியில் கடலை வந்தடைந்தனவோ அதே வழியில் மீண்டும் தமது பிறப்பிடம் நோக்கிச் செல்ல ஆயத்தமாகும். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் இந்த சால்மன் மீன்களின் தேசாந்திரப் பயணம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

**படிப்பினைகள்**

இம்மீன்களின் வாழ்க்கை மூலம் சவால்களை எதிர்கொள்ளும் திறன், தப்பிச் செல்லும் தந்திரம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, தியாகம் போன்ற பல படிப்பினைகளை அல்லாஹ் எமக்குக் கற்றுத் தருகின்றான். அவை மட்டுமன்றி, இலட்சக்கணக்கான இம்மீன்களின் பயணத்தால் பல ஆயிரம் ஜீவராசிகள் உணவைப் பெறுகின்றன. எனவே, பல உயிர்கள் உயிர் வாழ உணவும் கிடைக்கின்றது; அதேவேளை சால்மன் மீன்களின் எண்ணிக்கை கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது. அல்லாஹ்வின் இத்தகையதொரு துல்லியமான திட்டமிடலையும் இவற்றின் வாழ்க்கை வட்டத்திலிருந்து அறிந்து கொள்ளலாம், அல்ஹம்துலில்லாஹ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கியூபா QUBA



ஜனாதிபதி
ராகுஸ் கெஸ்ட்ரோ

'ஐரோப்பாவின் சர்க்கரை கிண்ணம்' என அன்போடு புகழப்படும் நாடு கியூபா. மிகப் பழைமையான நாகரிகத்தைக் கொண்டதும் கம்யூனிஸ போராளி பிடல் கெஸ்ட்ரோவால் பிரபல்யம் அடைந்ததுமான கியூபா அமெரிக்காவின் அருகில் அமைதியாக அமைந்திருக்கின்றது.

**தலைநகரம் - ஹவானா**

**மக்கள் தொகை - 11,382,820**

**மொத்த உள்நாட்டு உற்பத்தி**
**- 39.17 மில்லியன் அமெரிக்க டொலர்**

**நாணயம் - CUP**

**அமைவிடம்**

கரீபியன் கடலில் அமைந்துள்ள கியூபா ஐக்கிய அமெரிக்கா, ஹெய்ட்டி, மெக்ஸிகோ, டொமினிக்கன் குடியரசு, ஜமேக்கா, ஹெய்டி போன்ற முக்கிய நாடுகளை தன் எல்லைகளாக கொண்டுள்ளது.

**வரலாறு**

நெடுங்காலமாக மெசோமெரிக்கன் பழங்குடியினர் வாழ்ந்த கியூபாவை 1492 இல் ஸ்பெய்னிய ஆய்வாளர் கிறிஸ்டோபர் கொலம்பஸ் கண்டு பிடித்தார். அதன் பின் ஸ்பெயினும் அமெரிக்காவும் கியூபாவை ஆட்சி செய்தன. சர்வாதிகாரி பாடிஸ்டாவிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றிய பிடல் கெஸ்ட்ரோ, கியூபாவை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றார்.

**அபிவிருத்தி**

வரலாற்றில் எப்போதும் பேசுபொருளாக அமைந்த கியூபா கம்யூனிஸ கொள்கைகளை அதிகமாக மதிக்கும் ஒரு நாடாகும். 99.8% கல்வியறிவு வீதத்தைக் கொண்டுள்ள கியூபா, ஆரோக்கியமான மருத்துவ வசதிகளை உருவாக்கி தன் நாட்டு மக்களின் சராசரி ஆயுளை 78 ஆண்டுகளாக்கி உள்ளது.

**கொரில்லா போராட்டம்**

கியூபாவின் வரலாற்றில் 1953 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 1959 இல் வெற்றி பெற்ற விடுதலைப் போர் முக்கிய அம்சமாகும். பிடல் கெஸ்ட்ரோ மற்றும் சேகுவேராவின் தலைமையிலான கொரில்லா போர் சர்வாதிகாரி பாடிஸ்டாவை வெண்றதுடன் நிறைவு பெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம்:

சிறுவர்களின் ஆற்றல்களை ஊக்குவித்தல், அவர்களது ஆற்றல்களுக்கு களம் அமைத்தல், அவர்களது சிந்தனைகளை இஸ்லாமியமயப்படுத்தல், மாணவர்களது பாடசாலைக் கற்றலுக்கு மேலதிக உள்ளீடுகளை வழங்குதல், புதிய புதிய தகவல்களை வழங்குவதன் ஊடாக மாணவ வாசகர்களை வலுவூட்டுதல், 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழிகாட்டலை வழங்குதல் முதலான இலக்குகளைக் கொண்டதாக அகரம் மாணவர் சஞ்சிகை 2005 ஆம் ஆண்டு முதல் வெளிவருகிறது.

## சந்தா விண்ணப்பப் படிவம்

### JUST MEDIA FOUNDATION

அல்ஹஸனாத் | எங்கள் தேசம் | அகரம் | ප්‍රබෝධය | The Trend

Subscription Form

Receipt No:

Date:

Name: ..................................................

Address: ..................................................

..................................................

Tel: .............................. Mob: ..............................

E-mail: ..................................................

Profession: ..................................................

### PAYMENT DETAILS

| | 6 Month | Per Year |
|---|---|---|
| Alhasanath | 425.00 | 850.00 |
| Aharam | 400.00 | 800.00 |
| Prabodaya | 350.00 | 700.00 |
| The Trend | 1125.00 | 2250.00 |

சந்தாக்களை அனுப்ப JMF என்ற பெயருக்கு **MONEY ORDER** எடுத்து தபாலகம் **DEMATAGODA** என குறிப்பிட்டு அனுப்பவும்.

வங்கியில் வைப்பிலிட நாடுவோர் **Just Media Foundation, A/C NO: 79088651, Bank of Ceylon, MARADANA.** எனும் வங்கிக்கணக்கில் குறித்த தொகை பணத்தை வைப்பிலிட்டு உரிய பற்றுச்சீட்டை **77, SRI VAJIRAGNANA MW, COLOMBO -09** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Just Media Foundation
77, Sri Vajiragnana Mw, Colombo -09
Tel: 011 2689324 | Fax: 0112686030
Email: jmflanka@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM அகரம்




எமது வெளியீடுகளில்
விளம்பரம் செய்து
நீங்களும் எமது
சேவையில்
பங்குதாரர்
ஆகலாம்...

# ADVERTISEMENT TARIFF

| Pages | ALHASANATH | | AHARAM | | PROBODAYA | | TREND | | ENGAL THESAM | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT |
| FRONT | - | - | - | - | - | - | - | - | (TOP 2" X 4") | 3,000.00 |
| | | | | | | | | | (BOTTOM 2" X 10.5") | 5,000.00 |
| BACK | (10" X 7") | 60,000.00 | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (9.6" X 7") | 30,000.00 | (HALF 8" X 10.5") | 15,000.00 |
| | | | | | | | | | (QUARTER 8" X 5") | 7,500.00 |
| FRONT IN | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | - | - |
| BACK IN | (10" X 7") | 40,000.00 | (7" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | | |
| **INNER PAGES** | | | | | | | | | | |
| FULL | (9.4" X 7") | 20,000.00 | (9.4" X 6.5") | 12,000.00 | (9.4" X 6.5") | 10,000.00 | (8.6" X 6.2") | 15,000.00 | - | - |
| HALF | (4.7" X 7") | 10,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.3" X 6.2") | 8,000.00 | (8" X 10.5") | 10,000.00 |
| QUARTER | (4.7" X 3.5") | 6,000.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.3" X3.1") | 4,000.00 | (8" X 5") | 5,000.00 |
| COLUMN | (2" X 3.5") | 3,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.1") | 2,000.00 | (2" X 5") | 2,500.00 |
| COLUMN | (2" X 7") | 4,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.2") | 4,000.00 | (2" X10. 5") | 4,500.00 |

தொடர்புகளுக்கு:

0778942217 ☎ 0112689324

**JUST MEDIA FOUNDATION**

**No 77, Sri Vajiragnana Mawatha, Colombo-09**

jmf JUST MEDIA FOUNDATION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்கவாரிஸ்மி

# அட்சர கணிதத்தின் தந்தை

■ ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம் ■ வரலாற்றில் வாழ்ந்தோர்... **தொடர் 03**



முஹம்மத் இப்னு மூஸா அல் கவாரிஸ்மி எனும் பிரசித்தி பெற்ற நுண் கணிதவியலாளர் 'அட்சர கணிதத்தின் தந்தை' **(Father of Al-gebra)** என கணிதத்துறை அறிஞர்களால் சிலாகித்து புகழப்படும் ஓர் அறிவியல் மேதை ஆவார். இவர் 9 ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட பக்தாதின் பிரசித்தி பெற்ற பலக்லைக்கழகத்தின் பணிப்பாளர்களில் ஒருவரும் விஞ்ஞான ஆய்வுத்துறை வல்லுநரும் கூட.

நவீன கணிதவியல் துறையின் அடிப்படையான அட்சர கணித நுணுக்கங்களைக் கொண்ட கணித நூலான 'அல்கிதாப் அல்முக்தஸார் பீ ஹிஸாப் அல் ஜப்ர் வல் முகாபலா' எனும் நூல் இவரால் எழுதப்பட்டதே ஆகும். இந்நூல் இன்றும் கூட பல்வேறு கல்விக்கூடங்களில் போதிக்கப்பட்டு வருகின்றது. இந்நூல் 12 ஆம் நூற்றாண்டில் இலத்தீன் மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டது. ஐரோப்பிய கணிதவியல் துறையில் இந்து அரேபிய இலக்கங்களின் பயன்பாட்டினையும் அட்சர கணிதத்தின் அடிப்படைகளையும் புகுத்திய பெருமை அறிவியல் மேதை அல் கவாரிஸ்மி அவர்களையே சாரும் என்றால் மிகையாகாது.

இவரது நூல் ஷரீஆவின் சட்டத்திற்கு அமைவாக வாரிசு சொத்தின் பங்குகள் பிரிப்பதற்கான பல்வேறு கணிதவியல் இலகு வழிமுறைகளை உள்ளடக்கியுள்ளது. கலீபா அல்மஃமூன் அவர்களால் பரிபாலனம் செய்யப்பட்டு வந்த 'தாருல் ஹிக்மா' எனும் பக்தாதின் பிரபல்யம் பெற்ற பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றிய அல்கவாரிஸ்மி பல்வேறு அறிவியல் ஆய்வுகளையும் அங்கே நிகழ்த்தி வந்தார்.

**குட்டிக் கதை**

## எதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்?

ஒரு தந்தை ஒருநாள் ஆற்றங்கரைக்கு தன் மகனை அழைத்துப் போயிருந்தார். அவனிடம் ஒரு பையைக் கொடுத்து பெரிய பெரிய கற்களைக் காண்பித்தார்.

''இந்தப் பையை அந்த கற்களால் நிரப்பு'' என்றார். மகனும் அவ்வாறே நிரப்பி விட்டு ''பை நிரம்பி விட்டது'' என்றான்.

தந்தையோ மெதுவாக புன்னகைத்து விட்டு கீழே கிடந்த சிறிய சிறிய கூழாங்கற்களால் பையை நிரப்பினார்.

''இப்போதாவது நிரம்பி விட்டதாக ஒப்புக் கொள்வீர்களா?'' எனக் கேட்டான் மகன்.

இல்லையென்று தலையாட்டிய அவர், கீழே குனிந்து இரு கைகளாலும் மணலை அள்ளி பையில் போட்டார். கற்கள் கூழாங்கற்களுக்கு இடையில் இருந்த இடைவெளிகளில் மணல் புகுந்து கொண்டது. அவர் மகனைப் பார்த்து கனிவோடு கூறினார்:

''வாழ்வை மேம்படுத்தக் கூடிய அன்பு, உடல் நலம், மனநலம் போன்ற உன்னதமான விடயங்கள் தான் பெரிய கற்கள். வேலை, வீடு, வாகனம் போன்ற செல்வங்கள்தான் சிறிய கூழாங்கற்கள். பொழுது போக்கான அம்சங்கள்தான் மணல். எவ்வாறு முதலில் மணலால் பையை நிரப்பினால் மற்ற விடயங்களுக்கு இடம் இல்லாமல் போகுமோ அவ்வாறு பொழுதுபோக்கான விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கினால் பயனுள்ள விடயங்களை இழந்து விடுவோம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 20

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

**பாடம் 14**

## கணினிசார் பொது அறிவு

தொடர்...

98. ஸ்மால் டாக் எனப்படும் கணினி மொழி உருவான ஆண்டு *1971* - இது OOPS (Object Oriented Programming System) என்ற கொள்கையின் அடிப்படையில் உருவானது.

99. C என்ற மொழியை உருவாக்கியவர் - டென்னிஸ் ரிட்ச்சி (Dennis Ritchie).

100. கணினி உலகின் மிக பெரிய நிறுவனமான மைக்ரோசொப்ட் உருவான வருடம் - *1975*

101. கணினி உலகின் மிக பெரிய நிறுவனமான அப்பிள் உருவான வருடம் - *1976*

102. அப்பிள் நிறுவனம் மௌசை உருவாக்கிய வருடம் - *1983*

103. இணையத்தளம் உருவான வருடம் - *1990*

104. உலகின் மிக பிரபலமான கணினி மொழியான ஜாவா உருவான வருடம் - *1995*

105. ஜாவா கணினி மொழியை உருவாக்கியவர் - ஜேம்ஸ் காஸ்லிங் (James Gosling)

106. முன்னர் ஜாவா மொழியின் உரிமை நிறுவனம் சன் மைக்ரோ ஸிஸ்டம் (Sun Microsystems) ஆகும். தற்போது உரிமை நிறுவனம் ஆரக்கல் (Oracle Corporation) ஆகும்.

107. கூகுல் நிறுவனம் உதயமான வருடம் - *1998*

108. உலகின் மிக பெரிய தகவல் களஞ்சியமான விக்கிபீடியா வெளியிடப்பட்ட வருடம் - *2000*

109. சமூக இணையதளங்களில் முகநூல் (Facebook) பெரும் புரட்சியை செய்த வருடம் - *2004*

110. அறிவுரைகளைத் தேக்கி வைத்து கணினி ஆரம்பிப்பதற்கு உதவும் சாதனம் - வாசிப்பு மட்டும் நினைவகம் (ROM)

111. காசோலை ஒன்றின் இலக்கத்தை சரி பார்ப்பதற்கு பயன்படுத்தப்படும் சாதனம் - MICR (Magnetic Character Recognition)

112. ஒவ்வொரு கணினிப் பரம்பரையிலுள்ள பிரதான அபிவிருத்திக்குரிய பண்புகள் - பருமன் (Size) குறைதல், வேகம் (Speed) கூடுதல், செலவு (Cost) குறைதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

113. பல்பணி செயல் முறைமை (Multitasking Operating System) ஒரு CPU ஆல் பல programகள் உடன் நிகழ அனுமதிக்கும்.

114. வானொலி அலை, நுண் அலை, wifi என்பன - வழிப்படுத்தப்படாத ஊடகங்கள் ஆகும்.

115. தொலைக்காட்சி ஒளிபரப்பு - ஒற்றை வழி top (simplex)

116. கணினி வலையமைப்பில் NIC என்பதன் விரிவாக்கம் - Network Interface Card

117. சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்களை இனங்கண்டு தொழிற்படும் கணினிகள் - ஒத்திசைக் கணினிகள்

118. கணினி நிகழ்ச்சித் திட்டங்கள் (Computer Programming) உருவாக காரணமானவர் - அடா லவ்லேஸ்

119. தெரிவு செய்யப்பட்ட பந்தி தாளின் மத்திக்கு (center) கொண்டு செல்வதற்கு உபயோகிக்க கூடிய சுருக்கு வழி சாவி (Keyboard shortcuts) Ctrl + E

120. உடலின் உட்பாகங்களை வெவ்வேறாக முப்பரிமாணமாக படம் எடுக்கப் பயன்படும் உபகரணம் - X1

121. கணினியின் கதியை அளக்கப் பயன்படும் அலகு Mhz

122. வெப்ப தொழிநுட்பத்தைப் (Heat Technique) பயன்படுத்தி அச்சடிக்கும் Printer tif - Thermal & Electrostatic Printer

123. Microsoft நிறுவனம் இறுதியாக அறிமுகப்படுத்தி இயங்கி வரும் Operating System - Windows 10

124. Clip Art எனப்படுவது- Word இனால் வழங்கப்படும். ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள படங்களின் ஒரு தொகுதியாகும்.

125. இதயத்தின் செயல்பாட்டினை கண்டறிவதற்காக வைத்தியசாலைகளில் பாவிக்கப்படும் ECG கலப்பு கணினிகள்.

126. தரவு மற்றும் தகவல் என்பது - தகவல்களின் உண்மைத் தன்மை உள்ளீட்டு தரவுகளின் உண்மைத் தன்மையில் தங்கியுள்ளது.

127. Debugging என்பது - செய்நிரல் குறியீட்டிலுள்ள பிழைகளை கண்டுபிடித்தல் மற்றும் திருத்துதல்.

128. கலப்புக் கணினிகள் (Hybrid Computers) வாகனங்களின் புகையை பரீட்சித்து (Eco Test) பெறுபேறு வழங்கும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படும்.

129. மென்பொருள்களை இற்றைப்படுத்தல் (updating software) பிரசினங்களை நீக்குதல் (trouble shooting) புதிய வன்பொருட்களை இணைத்தல் போன்றன அழைக்கப்படுவது - System maintenance

130. கணினித் தொகுதியில் தடையற்ற மின் வழங்கல் கருவியை (UPS) பயன்படுத்துவதன் நோக்கம் - பிரதான மின் துண்டிக்கப்படும் மின்காப்பினை வழங்கல்

131. CPU இல் காணப்படும் குதைகள் - சமாந்தரக் குதையில் 25 துளைகள் காணப்படுவதுடன் அச்சுப் பொறி குதை எனவும் அழைக்கப்படும். PS2 குதை சுட்டி, விசைப்பலகை இணைப்பதற்கு பயன்படுத்தப்படும் USB குதையின் தரவு செல்லும் கதி ஏனைய குதைகளை விட அதிகமாகும்.

132. ASCII என்பதன் விரிவாக்கம் - American Standard Code for information Interchange

133. வலைப்பின்னல்கள் வடிவமைக்கப்படும் விதம் அழைக்கப்படுவது - Topology

134. கணினியின் வலையமைப்பு இடத்தியல் Ring, Star, Bus



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தாக்க சிந்தனை...


*ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)*

BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology


4. எழுந்தமானமான உள்ளீடு (Random Input). இந்த நுட்பத்தில் நீங்கள் எழுந்தமானமாக சொற்களை இணைத்தல், படங்களை இணைத்தல் பேன்றவற்றை மேற்கொள்ளலாம். அது புதிய தொடர்புகளைப் (New Connections) பற்றிச் சிந்திக்க உதவியாக அமையும். புதிதாகத் தோன்றும் சில சிந்தனைகள் நேரடியாகப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவி செய்யாவிட்டாலும் உள்ளத்தைப் புதிய திசைகளில் துணிகரமாகப் பயணிக்க அனுமதிக்கிறது.

உதாரணமாக; நீங்கள் ஏதாவது ஒரு பிரச்சினையில் மாட்டிக் கொண்டால் அல்லது சிக்கிக் கொண்டால் ஓர் அகராதியை எடுத்து எழுந்தமாறாக (randomly) ஒரு பக்கத்தைத் திறந்து அதிலுள்ள ஒரு சொல்லையோ அல்லது சில சொற்களையோ தெரிவு செய்து கொள்ளுங்கள். பின்னர், எழுந்தமானமாக (randomly) அந்த வார்த்தைகளை தொடர்புபடுத்தி புதிய சிந்தனைகளையும் யோசனைகளையும் கொண்டு வர முயற்சி செய்யுங்கள்.

இதன்போது தோன்றும் யோசனைகள் முற்றிலும் விசித்திரமானதாக இருக்கலாம். அவை பிரச்சினைகளுக்கான இறுதித் தீர்வாக இல்லாமல் இருக்கலாம். எனினும், இச்செயன்முறையானது உங்களுடைய சிந்தனைகளை புதிய, புதுமையான, இதற்கு முன் உங்களுக்குத் தோன்றியிராத ஒரு திசைக்கு வழிகாட்டலாம்.

5. உங்களுக்கு முன்னாலுள்ள சவால் அல்லது நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை இதுதான் என்பதை மிகத் தெளிவாக வரையறுத்துக் கொள்ளுங்கள். குறிப்பிட்ட சவால் அல்லது பிரச்சினையைத் தீர்ப்பதற்கான யோசனைகளையும் தீர்வுகளையும் முன்வைப்பதற்கு அது இலகுவாக அமையும்.

உலகப் புகழ் பெற்ற இயற்பியல் தத்துவ அறிஞர், ஐன்ஸ்டீன் ஒரு முறை, ''ஒரு பிரச்சினையைத் தீர்க்க எனக்கு ஒரு மணித்தியாலம் அவகாசம் இருக்குமென்றால் அதில் 55 நிமிடங்களை குறித்த பிரச்சினை பற்றிச் சிந்திப்பதற்கும், மீதி 05 நிமிடங்களை அப்பிரச்சினைக்கான தீர்வைப் பற்றிச் சிந்திப்பதற்கும் செலவிடுவேன்'' என்று கூறினார்.

"If I had an hour to solve a problem I'd spend 55 minutes thinking about the problem and five minutes thinking about solutions."

6. ஆழமான சிந்தனையில் நீங்கள் ஈடுபட்டிருக்கும்போது ஆறுதல் தேவைப்பட்டால், சிறு தூரத்துக்கு நடப்பது பற்றி அல்லது அல்குர்ஆனை செவிமடுப்பது பற்றி அல்லது இயற்கைக் காட்சிகளை (கடல், சமுத்திரம், மலைகள், மரங்கள், பூந்தோட்டம், பனி மூட்டம்) அவதானிப்பது பற்றிக் கருத்திற் கொள்ளுங்கள். உங்களுடைய புத்தாக்க சிந்தனையைத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

தூண்ட வேண்டுமென்றால், புத்தகம் வாசித்தல், புதிர்களைத் தீர்த்தல், புத்தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் பற்றிக் கருத்திற் கொள்ளுங்கள். அவை உங்களுடைய உள்ளத்துக்கு மேலும் உந்துதலளிக்கும்.

7. ஏற்கனவே உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் செய்திராத, புதிதான எதையாவது ஒன்றைச் செய்யுங்கள். உதாரணமாக; புது வகை உணவை உட்கொள்ளல், வித்தியாசமாக ஆடையணிதல், புதிய ஒரு பாதையால் பயணித்தல், வித்தியாசமான பயண மார்க்கத்தைப் பயன்படுத்தல் ( நடத்தல், துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், பேருந்து), அந்நியர் ஒருவருக்கு உங்களை அறிமுகம் செய்தல் இன்னும் பல...

8. வாசித்தல், வாசித்தல், வாசித்தல். 'வாசிப்பு' என்பது புத்தாக்க சிந்தனையைத் தூண்டும் மிக முக்கிய ஒரு கருவியும் வழிமுறையுமாகும். எதையாவது சாதிக்க வேண்டும் என்றால் வாசியுங்கள். வாசிக்கும் விடயம் நேரடியான தீர்வுகளைத் தரா விட்டாலும் தேவையான தீர்வுகளைப் பெறுவதற்கான எத்தனையோ வழிமுறைகளையும் யோசனைகளையும் எங்களுக்குத் தரும்.

9. ''ஆல்'' என்று வரும் உங்களுக்கே உரித்தான 3 வினாக்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். மிகச் சிறந்த புதுமையான கண்டுபிடிப்பாளர்கள் பலர் தங்களிடம் கையில் காணப்படும் பொருள் ஒன்றை எடுத்து அதைப் பார்த்து புத்திசாலித்தனமான சில வினாக்களைத் தொடுத்து அதை வேறொரு புதிய படைப்பாக மாற்றியுள்ளனர். இன்று எமது கைகளில் காணப்படும் அப்பிள் போனின் உரிமையாளரான நாம் எல்லோரும் அறிந்த ஸ்டீவ் ஜொப்ஸ் என்பவர் ஸ்மார்ட் போனை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் அதை ஆரம்பிக்கவில்லை. அப்போது பாவனையிலிருந்த செல்போன் ஒன்றைக் கையில் எடுத்து, ''மிகச் சிறந்த ஒன்றாக மாற்றுவதற்கு இதை எவ்வாறு மேம்படுத்தலாம்'' என்ற மிக எளிமையான கேள்வி ஒன்றை முன்வைத்தார். அதுவே இன்றுள்ள புதுமையான, புத்தாக்கமான படைப்பான அப்பிள் போன் தோற்றம் பெறுவதற்குக் காரணமாகனது.

இது தொடர்பான தெளிவான விளக்கம் யாதெனில், இந்த முழுப் பிரபஞ்சத்திலும் புத்தாக்கம் என்பது, புதுமையான படைப்பு என்பது இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்ற எந்தவொரு வழிகாட்டலோ, கையேடோ இல்லை. நாம் ஒவ்வொருவரும் எமது விசேட திறமைகள், விருப்பங்கள், சிந்திக்கும் வகை போன்றவற்றுக்கமைவாக நமக்கான ஓர் அணுகுமுறையை உருவாக்கி விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

ஓர் ஆசிரியர் தனது மாணவர்களிடம் புத்தாக்க சிந்தனையைக் கட்டியெழுப்புவதற்காக ''ஆல்'' என்று முடிவடையக் கூடிய பின்வரும் மூன்று வினாக்களைப் பயன்படுத்துமாறு ஆலோசனை கூறியுள்ளார்:

A. இதை மாற்றினால் என்ன நடக்கும்? (ஒரு பொருள் (Object) அல்லது ஒரு முறைமை (System) அல்லது சமூகத் தொடர்பு (Social Relationship)?

B. இன்னும் பத்து வருடங்களுக்குப் பின்னர் இப் பொருளைப் பயன்படுத்துவதாக இருந்தால் இதில் எதை மாற்றுவேன் (Change) அல்லது மேம்படுத்துவேன் (Improve)?

C. இப்பொருளை மேம்படுத்துவதற்கென ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் Rs. 150,000,000.00 ) பணம் வங்கியில் வைப்பிலிருந்தால் நான் என்ன செய்வேன்?

இந்த வினாக்கள் நீங்கள் வித்தியாசமாக சிந்திப்பதற்கு உதவி செய்யும் சக்திவாய்ந்த கருவிகளாக வர முடியும். நீங்கள் உங்களுக்குப் பொருத்தமான வேறு வினாக்களையும் உருவாக்கிக் கொள்ளலாம். நீங்கள் மீண்டும் மீண்டும் இந்த வினாக்களைப் பயன்படுத்தினால் பல புதிய யோசனைகள் உங்களுக்குத் தோன்றும் என்று அவர் மேலும் கூறினார்.


பின்னர், ஒரு துவிச்சக்கர வண்டியை எடுத்து மேற்கூறப்பட்டவாறான மூன்று வினாக்களைப் பயன்படுத்தி இவ்வண்டியை மேலும் புதுமையானதாக மாற்றியமைப்பதற்கான புது யோசனைகளுடன் வருமாறு மாணவர்களைக் கேட்டுக் கொண்டார். ஆரம்பத்தில் மாணவர்கள் தவிர்ந்து கொண்டனர், சந்தேகத்துடனும் அவநம்பிக்கையுடனும் காணப்பட்டனர். பல கலந்துரையாடல்கள், சிந்தனைக் கிளறல்கள் இடம்பெற்றதன் பின்னர் மாணவர்கள் புதிய யோசனைகளுடன் பாடசாலைக்கு வர ஆரம்பித்தனர்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் ஸ்போட்ஸ்



விரைவு - உயர்வு - துணிவு

## செஸ் போட்டியில் உலக சாதனை



சர்வதேச செஸ் சம்மேளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போட்டிகளில் இலங்கை பத்து வருடங்களின் பின் உலக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இந்த உலக சம்பியன் பட்டத்தை இலங்கை வீராங்கனை ஸைனப் சரீப் பெற்றுக் கொடுத்து இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார். குறித்த செஸ் போட்டிகள் இத்தாலியில் ஏப்ரல் முதலாம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை நடை பெற்றுள்ளன. இதில் 2000 ஆம் பிரிவின் கீழ் மகளிருக்கான உலக சம்பியன் பட்டத்தை ஸைனப் சரீப் சுவீகரித்துள்ளார்.

50 நாடுகளைச் சேர்ந்த சுமார் 200 வீராங்கனைகள் உலக செஸ் போட்டியில் பங்குபற்றியிருந்தனர். வெவ்வேறு பிரிவுகளில் நடைபெற்ற இந்த போட்டி களின் 2000 ஆம் பிரிவின் கீழ் மகளிருக்கான போட்டிகளில் சம்பியன் பட்டம் வென்றார். சர்வ தேச செஸ் போட்டிகளில் இலங்கை வீராங்கனை ஒருவர் சம்பியன் பட்டம் வென்ற இரண்டாவது சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## அஷ்ரஃப் சாதனை

கடந்த மாதம் தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 10.68 செக்கனில் ஓடி முடித்து, முதலாவது இடத்தை அப்துல் லத்தீப் அஷ்ரஃப் தட்டிக் கொண்டார். இதன் மூலம் இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் எதிர்வரும் ஜுலை மாதம் நடைபெறவுள்ள 22 ஆவது ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கை சார்பாக கலந்து கொள்ளும் வாய்ப்பை இவர் பெற்றிருக்கிறார்.

இவர், 2016 ஆம் ஆண்டு இந்தியாவின் குவாட்டி யில் இடம்பெற்ற தெற்காசிய விளையாட்டு விழாவில் 100 m ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கமும், 4 x 100 m அஞ்சலோட்டத்தில் தங்கப் பதக்கமும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக் கவை. இலங்கை இராணுவத்தின் விளையாட்டுப் பிரிவில் இலங்கை சார்பாக ஒலிம்பிக்கில் பங்கேற்ற சுனில் குணவர்த்தணவின் பயிற்சியின் கீழ் அவர் சிறப் பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்றார்.

## ஊக்கமருந்து அதிகளவில் பயன்படுத்தும் விளையாட்டு வீரர்கள்



ஊக்கமருந்து அதிகளவில் பயன்படுத்தும் விளை யாட்டு வீரர்கள் இருக்கும் நாடுகளின் பட்டியலில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. உலகளவில் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபடும் வீரர்கள் ஊக்கமருந்து உட்கொள்வதாக சர்ச்சைகளில் சிக்கு வது தொடர்கதையாகி வருகிறது. இந்நிலையில், சர்வதேச ஊக்கமருந்து சோதனை மையம் கடந்த 2015 இல் எந்த நாட்டு விளையாட்டு வீரர்கள் அதிகளவில் ஊக்கமருந்து உட்கொண்டார்கள் என்ற பட்டியலை அண்மையில் வெளியிட்டுள்ளது.

இதில், ரஷ்யாவைச் சேர்ந்த 176 விளையாட்டு வீரர்களுடன் அந்நாடு முதலிடம் வகிக்கிறது. இரண்டாம் இடத்தில் 129 வீரர்களுடன் இத்தாலி உள்ளது. மூன்றாம் இடத்தில் இந்தியா 117 வீரர் களுடன் உள்ளது. சிறுநீர் உள்ளிட்ட மாதிரி பரிசோ தனைகள் மூலம் இது கண்டறியப்பட்டுள்ளது. மொத்தம் 229,412 மாதிரிகள் சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு கழகத்திற்கு வந்ததும் கடந்த 2013, 2014 இல் இந்த மூன்று நாடுகளே முதல் மூன்று இடங்களைப் பிடித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச கிரிக்கெட் விதிமுறைகளில் அதிரடி மாற்றங்கள்!



களத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளும் வீரரை நடுவர்களே களத்தை விட்டு வெளியேற்ற அனுமதியளிப்பது உட்பட, சர்வதேச கிரிக்கெட் போட்டி விதிமுறைகளில் சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. புதிய விதிமுறைகள் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் விளையாட்டின் விதிமுறைகளை நிர்ணயிக்கும் 'மெரில்போன்' கிரிக்கெட் சங்கமே இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

**புதிய விதிமுறைகளின்படி:**

- களத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளும் வீரரை அந்த ஆட்டத்தை விட்டு தற்காலிகமாகவோ, குறிப்பிட்ட காலத்துக்கோ அல்லது நிரந்தரமாகவோ விலக்கி வைக்கும் அதிகாரம் நடுவருக்கு உண்டு.
- இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நடுவர்கள் விரும்பினால் எதிரணியினருக்கு ஐந்து ஓட்டங்களைக் கொடுக்கலாம்.
- வீரர் ஒருவரை வெளியேற்ற அவ்வணித் தலைவர் மறுக்கும் பட்சத்தில், எதிரணியினர் வெற்றி பெற்றதாக நடுவர்கள் அறிவிக்கலாம்.
- ஒரு முடிவுக்கு இரண்டு அணித் தலைவர்களும் இணங்க மறுத்தால் ஆட்டம் கைவிடப்படுவதாக நடுவர்கள் அறிவிக்கலாம்.
- பந்தைச் சேதப்படுத்துவது, களத்தைச் சேதப்படுத்துவது ஆகிய இரண்டு குற்றங்களும் ஒரே வகையாகவே இனங்காணப்படும். இதுபோன்ற குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டால், ஓர் ஆட்ட மிழப்பை செல்லுபடியற்றதாக அறிவிக்கலாம்.
- மாற்று வீரர்கள் விக்கெட் காப்பாளராகப் பணியாற்றலாம்.
- பெய்ல்களை ஸ்டம்ப்புகளுடன் பொருந்தியதாக அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம், விக்கெட் காப்பாளர்களின் கண்கள் உள்ளிட்ட உறுப்புக்கள் பாதிக்கப்படுவது தடுக்கப்படவுள்ளது.

பெய்ல் தாக்கியதில் கண்கள் பாதிக்கப்பட்ட தென்னாபிரிக்க வீரர் மார்க் பௌச்சர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டதைக் குறிப்பிட்டே இந்த விதிமுறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஸ்டம்ப்புகளுடன் பொருத்தப்பட்டதாக இருப்பதால் பெய்ல்கள் கூடிய தூரம் பறந்து செல்ல முடியாததாக அமைக்கப்படும் என்றும், அவற்றின் தற்போதைய நெகிழ்வுத் தன்மையில் எவ்வித மாற்றமும் இருக்காது என்றும் மேற்படி கிரிக்கெட் சங்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒலிம்பிக் சம்பியனை வீழ்த்தினார் இலங்கை வீரர்



உலகின் இரண்டாவது வேகமான குறுந்தூர ஓட்ட வீரரான ஜமைக்காவின் யொஹான்ப் ளேக்கை இலங்கை வீரரான ஹிமேஷ எஷான் தோல்வியடையச் செய்துள்ளார். ஜமைக்காவில் கடந்த மாதம் நடைபெற்ற விருந்தினர் தடகள போட்டியில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டே ஹிமேஷ இந்த வெற்றியைப் பெற்றுள்ளார். எட்டுப் பேர் கலந்து கொண்ட போட்டியில் ஹிமேஷவுக்கு ஆறாவது இடம் கிடைத்துள்ளது. இந்த வருடத்தில் தனது சிறந்த ஓட்ட நேரமான 10.29 வினாடிகளில் போட்டியை நிறைவு செய்துள்ளார்.

ஆனால், உலகின் இரண்டாவது வேகமான வீரருக்கு இறுதி இடமே கிடைத்துள்ளது. அவர் 10.88 வினாடிகளில் போட்டியை நிறைவு செய்துள்ளார். 10.8 வினாடிகளில் தூரத்தை நிறைவு செய்த அங்கோலா நாட்டவருக்கு முதலிடம் கிடைத்துள்ளது. ஹிமேஷ தடகள விளையாட்டுத் துறையில் இரண்டாவது சிறப்பான நேரத்தில் தூரத்தை நிறைவு செய்துள்ளார். தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்று சாதித்த ஹிமேஷ தற்போது பயிற்சிகளுக்காக ஜமைக்கா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைச் சரம்

# மரணம்

நீ மண்ணில் பிறந்ததும்
உன் அனுமதியின்றி
உன் உயிரை
உயில் எழுதிக் கொண்டதும்
நான்தான்


உணர்வுகளுக்கும்
உறவுகளுக்கும்
உடைமைகளுக்கும்
அடிமையாகும் உன்னை
இறுதியில் அடிமைப்படுத்தப் போவதும்
நான்தான்

நாணம் கொள்ளாமல்
நியாயம் பார்க்காமல்
என் நித்தியப் புன்னகையை கொட்டி
உன்னை வாரியணைக்கப் போவதும்
நான்தான்

நல்லுயிராயின்
சீரெடுத்து விண்ணுலகு செல்ல
அணைத்துக் கொள்வதும்
பாவியாயின்
சிலம்பெடுத்து மூச்சடக்கப் போவதும்
நான்தான்

கற்பனை உலகை
கட்டியாளும் மனிதர்களே
கண்டதையும் செய்து
கனவுக்குள் வாழும் உங்களை
பழமையெனும் நிஜ உலகுக்கு
அழைத்துச் செல்லப் போவதும்
நான்தான்

நானேதான்
உன் மரணம்



புத்தளக் கவி
சஸ்னா பேகம்
பு/கொத்தாந்தீவு மு.ம.வி.

# சுவனத்து மைந்தன்



சுவனத்து மைந்தன்
இரவு என்னை அணைத்துக் கொள்ள
உறவுகள் என்னைத் துறந்து செல்ல
உறக்கம் என்னை விட்டு
பிரிக்கப்படுகின்றது

என் பாதங்கள் முட்களின் மேல்
நடக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றன
ஆனால் அது உனக்கு – ரோஜாவின்
மென்மையை உணர வைக்கின்றது

என் கரங்களை கூரிய
ஆயுதங்கள் பதம் பார்க்கின்றன
ஆனால் அது எனக்கு
வளையல்கள் அணிந்த
கரங்களாகத்தான் தெரிகின்றது

என் விழிகள் பிடுங்கப்படுகின்றன
அத்துவாரத்தில் இருந்து வழியும்
ஈமானிய உதிரம் – கோடையில்
குளிர்தரு இன்பமாய்த்தான்
எனக்குள்ளது

என் கழுத்து நசுக்கப்படுகின்றது
என் ஜீவன் பறிக்கப்படுகின்றது
ஆனால் அது எனக்கு
சுவனத்து பூஞ்சோலையின்
பட்டாம்பூச்சிகளாய் மாற
அவா கொள்கின்றது

நான் சாமான்ய மனிதனல்ல
சரித்திரத்தை மாற்ற வந்தவன்
அலெப்போவில் கருகினாலும்
நாளை அர்ஷின் நிழலில்
இன்னொரு ஈமானிய பூவாய்
மலர அவா கொள்கிறேன்!

தமீமா பின்த் அமானுல்லா
பீலிக்கரை தெல்தோட்டை

## பேசும் கவிதை - இல 25



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 மே 25**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலிடம் பெற்ற கவிதை

### உயிர் காப்போம்

சீற்றுப் புறங்களைச்
சீத்தம் செய்து
சூழல் தூய்மையைக்
காத்திடுவோம்
டெங்கு, மலேரியா
நோய் தடுக்க
நீர் தேங்கிடும் இடங்களை
மூடிடுவோம்
உயிர் கொல்லியாம்
நுளம்பு, ஈக்கள் ஒழிக்க
ஒற்றுமையாகச் செயற்படுவோம்

✍ ஆர்.எம். அஸ்ரித் முஹம்மத்
பொ/அல்அஸ்ஹர் ம.வி.
கல்லனை, கதுறுவெல

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

### இரத்தத் தாகத்தால்...

இதோ! காத்திருக்கிறேன்
அதிகாலை வேளையிலும்
அந்தி சாயும் வேளையிலும்
என் நேரம் கனிந்துவர
என் ஆட்டம் ஆரம்பிக்கும்
இரத்தத் தாகத்தால்

✍ ஏ.எச்.எம். முகாரிம்
சாஹிரா தேசிய பாடசாலை
புத்தளம்

### பாதியே தீர்வு

இம்மியளவும் மிஞ்சாத
சின்னஞ்சிறு உயிரியே!
உனை அஞ்சி ஓடுது
என் தாய்தேசம் – இனி
ஈமானில் பாதியே
உனை வாள் வீசீம்

✍ எம்.வை. தொபியஸ்
கட்டுவன்வில் மு.க.வி.
நவசேனபுர,
பொலன்னறுவை

### டெங்கு ஓலம்!

ஓயுமா டெங்கு நோய்!
வாருங்கள் அழிப்போம்...
டெங்கு நுளம்பை
சீத்தமாய் வைப்போம்
சீற்றுச் சூழலை

✍ எம்.ஐ.எப். புஸ்ரா
ஸாஹிரா தே.பா.
ஜின்தோட்டை

### நுளம்பின் நிறம்

மௌனம் கலைத்து உயிர்
நீத்த இரு புறத்து
சமூகத்தாரின்
குருதியை குடித்த கறுப்பு
நிறமும் வெள்ளை நிறமும்
கலந்த நுளம்பே!

✍ எப்.எப். யன்ஹா
மாஞ்சோலை வீதி
கிண்ணியா - 03

### அட்டூழியம்

நெஞ்சம் பதறுகின்றது
நேர்மை சிதறுகின்றது
வஞ்சகம் வளர்கின்றது
வாளெடுக்க துணிகின்றது
காரணம்
நீ செய்யும் அட்டூழியங்கள்தான்...

✍ றஸ்மி ஹம்ஸீர்
மாஞ்சோலை வீதி
கிண்ணியா - 03

### நுளம்பின் நுண்ணறிவு

சிறு துளியின் பெருவெள்ளம்
பெருக்கெடுத்தது
நுண்ணிய நுண்ணங்கி
நுளம்பின் நுண்ணறிவுக்கு
நுழையாத இடமில்லை...

✍ முபாரக் றஸ்மி
நத்வதுல் உலமா அ.க.
மூதூர் - 05

### விரைந்து வா...

மரணங்களைக் குறைத்திட
சிசுக்களைக் காத்திட
பீதிகளை ஒளித்திட
தோழா விழிப்பாயிரு
அக்கொடிய நுளம்பை
பரம்பரையோடு அழிப்போம்
விரைந்து வா...

✍ டீ.எம். யாசீர்
நத்வதுல் உலமா அ.க.
மூதூர் - 05

### அழிந்து விடு

உங்கள் இனத்தை பெருக்கிக் கொண்டு
எங்கள் இனத்தை அழிக்க வந்த
உயிர் கொல்லியே – தயவு செய்து
உன் இனப்பெருக்கத்தை இல்லாதொழி
நீயும் அழிந்து விடு – இல்லையேல்
எங்கள் இனம் அழிந்து விடும்

✍ டீ. பாஹிம்
விவேகானந்த மேடு
கொழும்பு - 13

### எமனாகிய விருந்தாளி

உனது இரத்தத்தை அருந்திட
வந்த விருந்தாளி
உனக்கே எமனாகிறதென்றால்
மானிடா...
எங்கே உன் ஈமான்?
இதற்கு விடிவைக்கான
இறையோனை நோக்கி
இரு கரம் ஏந்திடு

✍ எல்.எம். மிப்தாஸ்
நத்வதுல் உலமா அ.க.
மூதூர் - 05

### சுயநலம்

உனக்கு உணவாக
இரத்தத்தையே கொடுக்கும்
மனிதனின் உயிரை –
பறிக்கிறாய்
தமக்காக வியர்வை சிந்தும்
தொழிலாளர்களை நசிக்கும்
முதலாளிமார் போல்...
டெங்கு எனப் பெயர் சூடி
மிஞ்சி விட்டாய்...

✍ எம்.எப். நாஜிதா
மே/மா/மது பலாந்தை மு.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள்

## தேங்கி நிற்கும் சாக்கடையா?

## சலசலத்தோடும் அழகிய நதியா?

பாடசாலை இடைவேளை நேரம் நெருங்க நெருங்க மாணவர்களின் கண்கள் துருதுருக்க ஆரம்பித்து விடுகின்றன. எப்போது மணி அடிக்கும் வெளியே பாயலாம் என அவர்கள் படபடப்புடன் ஒவ்வொரு நொடியையும் எண்ண ஆரம்பித்து விடுகின்றார்கள்.

''டிங்...டிங்...டிங்...'' மணி அடித்தாகி விட்டது.

சடாரென துள்ளியெழுந்து தரதரவென கதிரைகளை இழுத்து விட்டு எல்லோரும் வெளியே ஓடுகின்றார்கள், பாய்கின்றார்கள், தாவுகின்றார்கள், சறுக்குகின்றார்கள்... உடல் வியர்வையிலும் உள்ளம் ஆனந்தத்திலும் தொப்பலாக நனையும் வரை ஓடியாடி களைத்துப் போகின்றார்கள். கூச்சலும் கும்மாளமும் பாடசாலை சுவர்களில் எதிரொலிக்கின்றன.

மாணவர்கள் சுறுசுறுப்புடன் ஓடியாடித் திரிவது எவ்வளவு அழகான காட்சி. இளமைப் பருவம் என்றால் சூடேற்றப்பட்ட இரத்தத்தின் மறுபெயர் என மௌலானா மௌதூதி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் குறிப்பிட்டது போல, இந்த இளமைப் பருவம் என்பது சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் உற்சாகத்துடனும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

சுறுசுறுப்பு என்பது வாழ்வுக்குத் தேவையான அடிப்படையான காரணியாக அமைகின்றது.

கற்றலில் வெற்றி பெற சுறுசுறுப்பு அவசியமாகும். உடல் சுறுசுறுப்பாக இயங்கும்போது மூளையும் சுறுசுறுப்பாக இயங்குகின்றது.

சுறுசுறுப்பாகவும் கலகலப்பாகவும் இருப்பவர்களையே அனைவரும் விரும்புவார்கள். தேங்கிய சாக்கடையை

வ. முஹம்மத் நபீல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் மதிப்பதில்லை. சலசலவென அழகான இசையுடன் தொடர்ந்து பயணிக்கும் சிற்றோடையையே அனைவரும் ரசிக்கின்றார்கள்.

சுறுசுறுப்பின்றி சோம்பலில் மூழ்கிக் கொண்டிருப்பவர் பலவீனமான மனோநிலையைக் கொண்டவராகும். சாதாரண அற்பமான விடயத்தையும் எதிர்கொள்ள வழியின்றி அவர் இலகுவாக உடைந்து விடுவார். ஆனால், எப்போதும் சுறுசுறுப்பாக இயங்குபவர் அசாத்திய மன தைரியம் கொண்டவராக இருப்பார்.

- பயனுள்ள வாசிப்பு
- ஆரோக்கியமான உணவு, தேவையான அளவு நீர்
- சுறுசுறுப்பான சிந்தனைகள்
- போதை பழக்கம் இல்லாமை

**சுறுசுறுப்பை வளர்க்கும் காரணிகள்**

- எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் நண்பர்கள்
- மிகப் பெரும் கனவு
- நாளாந்த திட்டமிடல்
- நேரத்தை கவனமாக பயன்படுத்தல்
- தடைக்கற்களை பிரச்சினைகளாக பார்க்காமல் சவால்களாக பார்த்தல்

ஒரு மாபெரும் கனவு எம்மை எப்போதும் சுறுசுறுப்பாக இயங்க வைத்துக் கொண்டிருக்கும் இலட்சியத்தைக் காதலிப்பவர்களின் இதயம் எப்போதும் இருமடங்கு வேகமாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கும். உங்களுக்கென ஒரு மாபெரும் கனவை உருவாக்கிக் கொள்ளுங்கள். அதிகாலையிலும் அந்திமாலையிலும் அந்தக் கனவை உங்கள் மனக்கண் முன்னிறுத்தி நீங்கள் அதை அடைந்து விட்டதாக கற்பனை செய்து பாருங்கள்.

ஒரு மாபெரும் கனவு உங்களை ஒருபோதும் சோம்பிக் கிடக்க விடாது. வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல... அதிவேகமாக நீங்கள் இயங்குவீர்கள்.

போதை என்றால் மதுபானமும் சிகரட்டும் மட்டுமல்ல, நம்மை சுயமாக சிந்திக்க விடாமல் கட்டிப் போட்டுள்ள அனைத்து பழக்கவழக்கங்களும் போதைதான்.

- அளவுக்கு அதிகமான உணவு
- மட்டுமீறிய தூக்கம்
- தீய நண்பர்கள்
- தொலைபேசிகளுடன்... கணினிகளுடன் கழிக்கும் அதிக நேரம்
- வேலைகளை உரிய நேரத்தில் செய்யாமல் தள்ளிப் போடல்

போன்ற விடயங்கள் நிச்சயம் எம்மை மிக மோசமான சோம்பேறியாக மாற்றி விடும்.

சுறுசுறுப்புதான் உலகை அழகாக்குகின்றது; வாழ்விற்கு வர்ணம் பூசுகின்றது. துள்ளித் திரியும் மான்கள், அகவும் மயில்கள், சுழியோடும் சிறுபுள்ளி மீன்கள், அதிவேகமாக மாய உருவங்களில் மாறிக் கொண்டிருக்கும் மேகங்கள் என சுறுசுறுப்புதான் இந்த உலகை அழகாக்குகின்றது.

**இதில் நாம் எப்படி?**

சலசலவென துள்ளியோடும் அழகிய நதியாக சுறுசுறுப்புடன் வாழ்ந்து அனைவரையும் கவரப் போகின்றோமா? அல்லது சோம்பலுடன் புழுங்கிக் கிடந்து சாக்கடையாக மாறப் போகின்றோமா?

முன்னைய அமெரிக்க ஜனாதிபதி ஒரு கறுப்பராக இருந்தும் அவரின் பேச்சில் காணப்பட்ட சுறுசுறுப்பின் வசீகரம் கண்டு மக்கள் அவரை ஜனாதிபதியாக தேர்வு செய்தார்கள். தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் என்னதான் சர்ச்சைக்குரிய கருத்துக்களைச் சொன்னாலும் அவரிடம் காணப்படும் அதிசய சுறுசுறுப்பை உலகம் வெகுவாக ரசிக்கின்றது.

சுறுசுறுப்பு என்றால் படபடவென வேலைகளைச் செய்வது மாத்திரமல்ல, சுறுசுறுப்பாக சிந்திக்க பழக வேண்டும். ஒப்படைக்கப்பட்ட வேலைகளை குறிப்பிட்ட நேரத்தினுள் வினைத்திறனாகச் செய்யப் பழக வேண்டும். எப்போதும் உற்சாகமாகவும் கலகலப்பாகவும் மிளிர்ந்து பிரகாசிக்க வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் ஒரு நிஜமான ஹீரோவாக இந்த உலகில் நீங்கள் தலைநிமிர்ந்து உலா வர வேண்டும்!!!

அதற்கு நீங்கள் தயாரா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேரம் 45 நிமிடம்
வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

சரியான விடையின் கீழ் கீறிடுக.

7, 9, 2, 8, 3, 5, 6, 4

1. கட்டத்தினுள் காணப்படும் ஒற்றை இலக்கங்களின் எண்ணிக்கை?
i. 4 ii. 5 ii. 6

2. கட்டத்தினுள் காணப்படும் இரட்டை இலக்கங்களின் எண்ணிக்கை?
i. 5 ii. 4 iii. 3

3. கட்டத்தினுள் காணப்படும் சதுர எண்கள் யாவை?
i. 9, 6 ii. 4, 9 iii. 6, 8

4. கடிகார முகமொன்றில் செங்கோணத்தைக் காட்டும் நேரங்கள் யாவை?
i. 9.00 மணி, 2.30 மணி
ii. 3.00 மணி, 1.30 மணி
iii. 3.00 மணி, 9.00 மணி

5. சபீக்கின் தற்போதைய வயது 8 ஆகும். அமீரின் வயது 16 ஆகும். சபீக்கின் வயது இருமடங்கு அதிகரிக்கும்போது அமீரின் வயது என்ன?
i. 20 வயது ii. 22 வயது
iii. 24 வயது

6. 10 மீற்றர் நீளமுள்ள கம்பியிலிருந்து 365 செ.மீ. கம்பித் துண்டு வெட்டி எடுத்தால் மீதமாகவுள்ள கம்பியின் நீளம் எவ்வளவு?
i. 1235 செ.மீ ii. 6 மீ. 35 செ.மீ
iii. 635 மீ

பின்னங்களில் காணப்படும் வெற்றுக் கட்டத்திற்குப் பொருத்தமான இலக்கத்தை தெரிவு செய்க.

7. $\frac{1}{4} = \frac{\quad}{20}$ i. 4 ii. 5 iii. 2

8. $\frac{2}{3} = \frac{6}{\quad}$ i. 9 ii. 12 iii. 10


9. குமார் பயணமொன்றின் 2/6 தூரத்தை சைக்கிளிலும் 1/6 தூரத்தை பஸ்ஸிலும் மிகுதித் தூரத்தை புகையிரதத்திலும் சென்றான். புகையிரதத்தில் சென்ற தூரம் எவ்வளவு?
i. 2/6 ii. 3/6
iii. 4/6

10. கீழே உள்ள உரோம இலக்கங்களை ஒழுங்கு முறையில் சரியாக எழுதினால் வரும் விடை யாது? 9, 11, 13, 15
i. xi, ix, xii, xv ii. ix, xi, xiii, xv
iii. ix, x, xiii, xv

11. 2 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களில் உள்ள நிமிடங்கள்?
i. 120 நிமிடங்கள் ii. 110 நிமிடங்கள்
iii. 140 நிமிடங்கள்

12. பத்து பேனைகளை ரூபா 140 இற்கு வாங்கி ஒரு பேனைக்கு 5 ரூபா இலாபம் வைத்து விற்றால் ஒரு பேனையின் புதிய விலை எவ்வளவு?
i. ரூபா 20 ii. ரூபா 19
iii. ரூபா 14

13. இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.





14. 100 கிராம் பருப்பின் விலை ரூபா 12 எனின் 750 கிராம் பருப்பின் விலை யாது?
i. ரூபா 120 ii. ரூபா 110
iii. ரூபா 90

15. 'பதினெட்டாயிரத்து முந்நூற்று ஒன்று' எனும் எண்ணில் உள்ள இலக்கங்களை பின்னாலிருந்து முன்னால் எழுதும்போது கிடைக்கும் எண் யாது?
i. 10381 ii. 10831 iii. 10138


தரப்பட்ட உருக்களில் உள்ள எண்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

16.




i. 48 ii. 62 iii. 60

17.




ii. 40 ii. 50 iii. 30




2017 - ஓட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் படங்களுக்கு சரியான சொல்லை தெரிந்து கோடிடுக.

18. 

தென்னங்கீற்று
தென்னங்கீட்டு
தென்னங்கீற்று

19. 

இளனீர்
இளநீர்
இலநீர்

20. 

பயற்றங்காய்
பைத்தங்காய்
பைற்றங்காய்



21. 


நட்சத்திரம்
நட்ச்சத்திரம்
நற்சத்திரம்

22. 

கோடாரி
கோடாளி
கோடரி

பின்வருவனவற்றுள் நிறை குறைந்தது?

23.   

24.   

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

அ) அறிஞர் கூறும் வார்த்தைகள்
ஆரம்பத்தில் கசப்பினும்
புரிந்து கொண்டு நடக்கையில்
அரிய தேனாய் இனிக்குமே

ஆ) தோல்வி அடைய நேரிடில்
துவண்டு போகலாகுமோ
தோல்விதானே வெற்றியின்
தொடக்கப்படிகள் ஆகுமே

25. தேனாய் இனிப்பது?
i. பலா ii. அறிஞர் கூறும் வார்த்தைகள்
iii. வெற்றிகள்


26. மனிதன் துவண்டு போவது?
i. வெற்றியினால் ii. தோல்வியினால்
iii. வார்த்தைகளால்

27. பாடலில் இடம்பெற்ற அறுஞ்சுவைகளுள் இரண்டு?
i. உவர்ப்பு, துவர்ப்பு ii. கசப்பு, இனிப்பு
iii. புளிப்பு, கசப்பு

28. வெற்றியின் ஆரம்பப்படி?
i. சந்தோஷம் ii. தோல்வி
iii. பயிற்சி

29. சொல் என்பதற்கு பாடலில் இடம்பெற்ற சொல்?
i. புரிந்து ii. வார்த்தை iii. துவண்டு

30. மேற்குறித்த உருவத்திற்கேற்ப பின்வரும் எக்கூற்று சரியானது?



i. வட்டங்களின் எண்ணிக்கையை விட முக்கோணிகள் குறைவாக காணப்படுகின்றது.
ii. முக்கோணிகளின் எண்ணிக்கையும் நீள் சதுரத்தின் எண்ணிக்கையும் சமமானதாகும்.
iii. நீள் சதுரத்தின் எண்ணிக்கையை விட முக்கோணிகளின் எண்ணிக்கை கூடுதலாக காணப்படுகிறது.

31. 1500 கிலோ கிராம் தேயிலையில் எத்தனை 75 கிராம் பக்கற்றுக்கள் தயாரிக்கலாம்.
i. 12 ii. 60 iii. 20

32. 2 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களில் உள்ள நிமிடங்கள் எத்தனை?
i. 120 நிமிடங்கள் ii. 140 நிமிடங்கள்
iii. 150 நிமிடங்கள்

44 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்
வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**பின்வரும் கதையை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு காட்டில் ஒரு மான் கூட்டம் வாழ்ந்து வந்தது. அந்த காட்டுக்கு ஒரு வேடனும் வந்தான். அவன் மான்களை பிடிப்பதற்கு ஒரு தந்திரம் செய்தான். காய்களும் கனிகளும் நிறைந்த ஒரு மரத்தில் ஏறி அதன் கொப்புகளை ஆட்டினான். பழங்களும் காய்களும் மரத்தைச் சூழ விழுந்து சிதறின. இவற்றை மான்கூட்டம் உண்ண வரும். அப்போது நான் அதனைப் பிடித்துக் கொள்வேன் என வேடன் நினைத்துக் கொண்டான்.

அவன் நினைத்ததுபோல் மான்கூட்டம் வந்து கொண்டிருப்பதைக் கவனித்தான். ஆனால், அவை ஓர் இடத்திலே நின்றுவிட்டன.

முன்னால் வந்த அந்தக் கூட்டத்தின் பெரிய மான் பின்னால் திரும்ப, ''நண்பர்களே யாரும் அங்கே செல்ல வேண்டாம். இதில் ஏதோ சூழ்ச்சி தெரிகிறது. திரும்பி விடுவோம்'' என்றது. மான்கூட்டம் வந்த வழியே திரும்பிச் சென்றது. வேடனும் ஏமாற்றத்துடன் திரும்பினான்.


1. காட்டுக்கு வந்தவன் யார்?
2. உபாயம் என்பதற்கு மூன்றாம் பந்தியில் இடம் பெற்ற அதே கருத்தைத் தரும் சொல் யாது?
3. இக்கதைக்கு பொருத்தமான பழமொழி.
   i. புள்ளிமான் துள்ளி விளையாடும்
   ii. புத்திமான் பலவான்
   iii. தன்வினை தன்னைச் சுடும்
4. முதற்பந்தியில் இருந்து எதிர்க்கருத்தை தரக் கூடிய இரு சொற்களை எழுதுக.
5. பெண் மான் பிணை போல ஆண் மான்?


**'அ' பகுதிக்கு பொருத்தமான விடைகளை 'ஆ' பகுதியில் இருந்து தெரிந்து அதன் குறியீடுகளை கட்டத்தினுள் இடுக.**

| | அ | ஆ |
|---|---|---|
| 6. | தோமஸ் அல்வா எடிசன் | A உயிர்எழுத்துக்கள் |
| 7. | பாரத நாடு | B மின்குமிழ் |
| 8. | மூதுரை | C பாரதியார் |
| 9. | பன்னிரெண்டு | D ஔவையார் |
| 10. | சிறுவர் பாடல் | E இந்தியா |

**முதல் படத்திற்கு பொருத்தமற்றதை கீறிடுக.**

11.  i.  ii. 

12.  i.  ii. 

13.  i.  ii. 

**சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.**

14. மகே சுது பூசா ....................................
15. கபுட்டா கலு பாட்டாய் ..........................

**ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.**

16. This is my Pen ....................................
17. My father's name Ruwan ........................

**பெண்பால் தருக.**

18. நடிகன் ....................................
19. பிதா ....................................
20. மருமகன் ....................................

21. விடியற் காலையில் விடிவெள்ளியை காணக் கூடிய திசையானது?
    i. தென்திசை ii. கிழக்குத் திசை
    iii. மேற்கு திசை
22. சார்ல்ஸ் பபேஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட பட்டப் பெயர் என்ன?
    i. கணினியின் தந்தை ii. கணித மேதை
    iii. இணையத்தின் தந்தை
23. சீமெந்து உற்பத்தியில் பிரபல்யமான இரு நகரங்களாவன?
    i. கொழும்பு, காலி ii. புத்தளம், கண்டி
    iii. புத்தளம், காங்கேசன் துறை
24. இலங்கையில் முகமூடி உற்பத்திக்கு பிரபல்ய மான நகரம்?
    i. கதிர்காமம் ii. காலி
    iii. அம்பலாங்கொடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. பங்கதெனிய பிரதேசம் பிரபல்யமானதற்குக் காரணமாவது?

i. ஓட்டுத் தொழிற்சாலை
ii. பீங்கான் தொழிற்சாலை
iii. சீமெந்து தொழிற்சாலை

26. இலங்கையில் 5 மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்?

i. தென் மாகாணம்  ii. வட மாகாணம்
iii. கிழக்கு மாகாணம்

27. கடற் தொழிலில் பயன்படுத்தும் வீச்சுவலை என்பதால் விளங்குவது?

i. வலையை வீசி மீன் பிடித்தல்
ii. எல்லோரும் சேர்ந்து வலையை இழுத்து மீன் பிடித்தல்
iii. ஆழமான கடலில் வலையை போட்டு மீன் பிடித்தல்

28. கொடி வர்க்கத்தில் சேராத தாவரம்

i. பாகல்  ii. கொடித்தோடை
iii. கரட்

29. வடமேல் மாகாணத்தில் காணப்படும் மாவட்டங்கள்?

i. புத்தளம் மாவட்டம், சிலாபம் மாவட்டம்
ii. நீர்கொழும்பு மாவட்டம், புத்தளம் மாவட்டம்
iii. குருணாகல் மாவட்டம், புத்தளம் மாவட்டம்

30. காந்தம் பயன்படுத்தப்படும் ஒரு பொருள் யாது?

i. ஒலிபெருக்கி  ii. மின்குமிழ்
iii. கடிகாரம்

31. இயற்கை அனர்த்தங்களில் ஒன்று.

i. சூறாவளி
ii. வாகன விபத்து
iii. காடு அழித்தல்

32. அம்பாறை என்ற பிரதேசம் அமைந்துள்ள மாகாணம் எது?

i. வடமேல் மாகாணம்
ii. கிழக்கு மாகாணம்
iii. வட மாகாணம்

33. தோட்டத்தில் வேலி அமைப்பதற்கு பொருத்தமானது?

i. பூவரசு  ii. வேம்பு
iii. கிளிசிறியா

34. பார்வை, கேட்டல் சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்ளும் சாதனம் எது?

i. வானொலி  ii. தொலைக்காட்சி
iii. ஒலிபெருக்கி

35. கலா ஓயாவை கட்டுவித்த மன்னன் யார்?

i. காசியப்பன்  ii. தாதுசேனன்
iii. பராக்கிரமபாகு

36. அரசாங்கத்தினால் எமக்கு கிடைக்கும் இலவசமான சேவையானது?

i. நீர்  ii. மின்சாரம்
iii. தபால் சேவை

37. தாவர பெருக்கத்திற்கு உதவும் பிராணி?

i. கிளி  ii. எறும்பு
iii. தேனீ

38. இரவு நேரத்தில் பூக்கும் பூ எது?

i. கடுப்புல்  ii. செவ்வரத்தை
iii. தாமரை

39. தனது கால்களால் இரைகளை பற்றிப் பிடித்து தூக்கிச் செல்லும் பறவையானது?

i. பருந்து  ii. கிளி
iii. மைனா

40. அந்திமந்தாரை பூக்கும் நேரமானது?

i. மாலைநேரம்  ii. பகல்வேளை
iii. காலைநேரம்

**அடுத்து வர வேண்டிய எண்ணை எழுதுக.**

41. 9099 :......................
42. 8199 :......................
43. 8999 :......................
44. 3.5 கிலோ கிராம் எத்தனை கிராம்?
45. 2.5 கிராம் + 300 கிராம் + 500 கிராம் = ...............
46. கோலத்தை அவதானித்து இடைவெளியில் வர வேண்டிய எண்ணை எழுதுக.
47. குடை ஒன்றின் விலை ரூபா 450 ஆகும். தொப்பியின் விலை குடையின் விலையில் 3/5 பங்கு ஆகும். தொப்பியின் விலை என்ன?

i. ரூபா 270  ii. ரூபா 170
iii. ரூபா 27

48. இனிப்பு ஒருவருக்கு 3 வீதம் கொடுத்தால் 30 பேருக்கு கொடுக்கலாம். அவற்றை 5 வீதம் கொடுத்தால் எத்தனை பேருக்கு கொடுக்கலாம்?

i. 10  ii. 15  iii. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. ஒரு வேலையை செய்ய 6 பேருக்கு 12 நாட்கள் தேவை எனின், அதே வேலையை 3 பேர் செய்தால் எத்தனை நாட்கள் தேவைப்படும்?

i. 12 நாட்கள் ii. 18 நாட்கள்
iii. 24 நாட்கள்

50. மீதி இன்றி 2 ஆல், 3 ஆல், 5 ஆல், 10 ஆல் வகுபடும் எண்களைக் கொண்ட தொகுதி?

i. 60, 100 ii. 90, 60 iii. 50, 60

**பின்வரும் சோடி சொற்களை பொருத்தமான இடங்களில் எழுதுக.**

கிளி, கிலி, வலை, வளை, வாலை, வாளை, கலை, களை

51. .......... வெட்டுவதற்காக சேவகன் 52. ............ ஓங்கினான்.

53. .......... பாம்பைக் கண்டதும் 54. ............ கொண்டது.

55. .......... பயின்றவன் 56. வயலில் நின்ற ......... களை பிடுங்கினான்.

57. ..........யில் இருந்து விடுபட்ட எலி 58. .......... யை நோக்கி ஓடியது.

''எனது வாழ்வில் மறக்க முடியாத மழை நாள்'' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

**விடைகள்**

1. வேடன்
2. சூழ்ச்சி
3. ii
4. காய், கனி
5. கலை
6. B
7. E
8. D
9. A
10. C
11. i
12. ii
13. i
14. என்னுடைய வெள்ளை பூனை
15. காகம் கறுப்பு நிறம்
16. இது என்னுடைய பேனா
17. எனது தந்தையின் பெயர் ருவன்
18. நடிகை
19. மாதா
20. மருமகள்
21. ii
22. i
23. iii
24. iii
25. i
26. ii
27. i
28. iii
29. iii
30. i
31. i
32. ii
33. iii
34. ii
35. தாதுசேனன்
36. தபால் சேவை
37. தேனீ
38. கடுப்புல்
39. பருந்து
40. மாலைநேரம்
41. 9100
42. 8200
43. 9000
44. 3500 கிராம்
45. 3300 கிராம்
46. 43
47. i
48. iii
49. iii
50. ii
51. வாலை
52. வாளை
53. கிளி
54. கலி
55. கலை
56. களை
57. வலை
58. வளை

**41 ஆம் பக்கத் தொடர்...**

33. இரட்டை எண், ஒற்றை எண் முறையே காணப்படும் விடையின் கீழ் கோடிடுக.

i. 734, 848 ii. 647, 550
iii. 700, 105

34. மிகுதியின்றி இரண்டினால் வகுக்கக் கூடிய எண்களைக் கொண்ட எண் தொகுதியின் கீழ் கோடிடுக.

i. 700, 500, 50
ii. 720, 444, 321
iii. 780, 107, 338

35. புத்தகம் ஒன்றின் விலை ரூபா 450. பயிற்சிக் கொப்பி ஒன்றின் விலை புத்தகத்தின் விலையில் 2/5 பங்கு. பயிற்சிக் கொப்பியின் விலை என்ன?

i. ரூபா 150 ii. ரூபா 180
iii. ரூபா 300

**விடைகள்**

1. i
2. ii
3. ii
4. iii
5. iii
6. ii
7. ii
8. i
9. ii
10. ii
11. iii
12. ii
13. 21 செ.மீ
14. ரூபா 90
15. i
16. iii
17. iii
18. தென்னங்கீற்று
19. இளநீர்
20. பயற்றங்காய்
21. நட்சத்திரம்
22. கோடரி
23. iii
24. i
25. ii
26. ii
27. ii
28. ii
29. ii
30. iii
31. iii
32. ii
33. iii
34. i
35. ரூபா. 180



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 21

## தலைப்பு: டெங்கிலிருந்து பாதுகாப்பு

### பரிசில் பெறும் சித்திரங்கள்



எம்.இஸட்.எம். ஸைத்
க/அல் ஸபா மு.வி.
வத்தேகெதர, பொல்கொல்ல



மாஹிர் ஸைனப்
தாஹா நகர்
மூதூர் - 07



எம்.இஸட்.எப். ஸம்லா
க/அல் ஸபா மு.வி.
வத்தேகெதர, பொல்கொல்ல


### பாராட்டுக்குரிய சித்திரங்கள்



எஸ்.எம். சஹீல்
நிக/அபுக்காகம மு.ம.வி.
மொன்னே குளம்



எம்.ஐ. ரிஸான் அஹமட்
அல் இக்ரா மு.ம.வி.
உலப்பனை



எம்.ஆர்.எம். அர்ஷத்
நிக/அல் இல்மியா மு.ம.வி.
வெல்பொதுவெவ




எம்.ஐ. பாத்திமா
கம்பளை ஸாஹிரா க.



எப்.எச். தாஜுதீன்
க/உடபிடிய அல்ஹுஸ்னா மு.ம.வி.
தெல்தோட்டை



எம்.எஸ். அஸ்மா
வெலம்பொட மு.ம.வி.
வெலம்பொட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது..

## Islamic Book House இன் புதிய வெளியீடுகள்!

### "தரம் ஒன்று முதல் உயர்தரம் வரைக்கான உசாத்துணை நூல்கள்"





**இஸ்லாமிக் புக் ஹவுஸின் புத்தகங்கள்..**

நியாயமான விலைகளில் தரமானவைகள்.

முன் எப்போதும் இல்லாத வகையில் பொருத்தமான, கவர்ச்சியான முன் அட்டைகளைத் தாங்கியவைகள்.

அனுபவம்மிக்க, பிரசித்தி பெற்ற தகுதிவாய்ந்த, ஆசிரியர்களால் எழுதப்பட்டவைகள்.

புதிய பாடத்திட்டத்திற்கு (2016-2017) அமைவாக உருவாக்கப்பட்டவைகள்.

தலை நகரை அடுத்து வாழும் மாணவர்களின் மேம்பாடு, நலன் கருதி இலங்கையில் உள்ள அனைத்து இடங்களிலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

www.ibh.lk வலைதளத்தின் ஊடாக Online Order மூலம் புத்தகங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

தபால் மூலமும் (VPP) பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**YOU RING! WE BRING!**

**FREE HOME DELIVERY SERVICE**

City Limits Only / Conditions Apply

Designed by Mufariz JM

**For your complete and competitive books & stationery shopping experiences..**

IBH

**ISLAMIC BOOK HOUSE**

77, Dematagoda, Road, Colombo 09, Sri Lanka.

Tel: 2684851, 2669197, Fax: 0112688102 Hot Line 011 5 925 935

E-Mail ibhinfo77@gmail.com Web: www.ibh.lk